Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 22 செவ்வாய்க்கிழமை (05.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 217

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்

உயர்தரத்துடனும்

குறைந்த செலவுடனும்

குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# நல்லாட்சி என்பது ஒரே இரவில் மலராது




## சுமந்திரன் தெரிவிப்பு

(வவுனியா)

நல்லாட்சி என்பது ஒரே இரவில் வந்துவிடாது. அது படிப்படியாகவே நிகழுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. இதன் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக விசேடமாக ஆராயப்பட்டது. இதில் விசேடமாக 19 ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்த சட்டத்தின் விடயங்கள் அதன் தாக்கம் தொடர்பாகவும் அதனால் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பாகவும் கலந்துரையாடினோம்.

இதன் பின்னர் தற்போது நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவுள்ள தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பாகவும் எமது உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பாக எங்களுடைய நிலைப்பாட்டை எவ்வாறு எடுப்பது என நாங்கள் சில தீர்மானங்களை எடுத்துள்ளோம். அதன் நிமிர்த்தம் பிரேரிக்கப்பட்ட வித்தியாசமான முறைகளை சரியாக படித்து ஆராய்ந்து அதற்கும் மேலாக எங்களுடைய யோசனைகள் ஏதாவது இருக்குமாயின் அதனையும் பிரேரிக்குமாறு ஒரு குழு நியமிக்கப்பட்டு இருவார அவகாசத்தினுள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளோம்.

வரபோகின்ற தேர்தல் காரணமாகவும் அரசியல் நிலை காரணமாகவும் எங்களுடைய நிலைப்பாடுகளை அடி மட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் அரசியல் விழிப்புணர்ச்சி செயலமர்வுகளாக அல்லது மக்கள் சந்திப்புகளாக நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கட்சிக்கு

19 ஆம் பக்கம் பார்க்க


# மகிந்த – மைத்திரி நாளை சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பு நாளை அல்லது நாளை மறுதினம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர்களான, டிலான் பெரேரா, மகிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன ஆகியோர் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து இந்தச் சந்திப்புக் குறித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க



## மின்சார வயர் அறுந்து வீழ்ந்து தந்தையும், மகனும் பலி

### மல்லாகம் கல்லாரையில் துயரம்



யாழ்ப்பாணம் சுன்னாகம் ஐயனார் கோயிலடிக்கு அண்மையிலுள்ள வெள்ளவாய்க்கால் வீதியில் இடி மின்னல் தாக்கியதில் மின்சார வயர் அறுந்து விழுந்து ஏற்பட்ட அனர்த்தத்தில் 30 வயது தந்தையும், அவரது 9 வயது மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த அனர்த்தத்தில் சிக்கி மல்லா

19 ஆம் பக்கம் பார்க்க

# இராணுவத் தேவைக்கு கோரப்பட்ட 6000 ஏக்கரை வழங்க மறுப்பு

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஆறாயிரம் ஏக்கர் காணி இராணுவத்தினரின் தேவைக்கு பிரதேச செயலரிடம் அனுமதி கோரப்பட்டுள்ள நிலையில் இதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மீள்குடியேற்ற அமைச்சின் உயரதிகாரிகளுடனான கூட்டத்தில் மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சரின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்திக்

19 ஆம் பக்கம் பார்க்க

# தனியார் வைத்தியசாலைகள் கட்டணப் பட்டியலை வழங்குவது அவசியம்

## வருகிறது வர்த்தமானி

தனியார் வைத்தியசாலைகளுக்கு வருகின்ற நோயாளிகளுக்கு, வழங்கும் மருந்துகள் மற்றும் பயன்படுத்தும் வைத்திய உபகரணங்களின் விலைகளை குறிப்பிட்டு கட்டணப்பட்டியல் விநியோகிக்கப்பட வேண்டும் என்று நுகர்வோர் அதிகார சபை, தனியார் வைத்திய நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளது.

சில தனியார் வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு வழங்குகின்ற கட்டணப்பட்டியலில் மருந்து மற்றும் வைத்திய உபகரணங்களின் விலைகள் உண்மையான விலைகளை விடவும் கூடுதலான விலைகள் குறிப்பிடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அவற்றைக் கவனத்தில் கொண்டே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டது என்று நுகர்வோர்

19 ஆம் பக்கம் பார்க்க

# அரச ஊழியர்களின் சம்பளம் கடந்த ஆண்டில் அதிகரிப்பு

## மத்திய வங்கி அறிவிப்பு

அரச ஊழியர்களின் சம்பள கொடுப்பனவுகளுக்காக பெருந்தொகைப் பணம் கடந்த ஆண்டில் மேலதிகமாக செலவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு மாத்திரம் 4 ஆயிரத்து 780 கோடி ரூபாவைக் கடந்த அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 2013 ஆம் ஆண்டில் காணப்பட்ட 393.2 பில்லியன் ரூபாவிலிருந்து 2014 ஆம் ஆண்டில் 441 பில்லியன் ரூபாவாக இத்தொகை அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி

19 ஆம் பக்கம் பார்க்க

# போர்க்குற்ற விசாரணை கெரியின் நிலைப்பாட்டை வரவேற்கும் சொல் ஹெய்ம்

ஐ.நா.வின் போர்க்குற்ற விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, கேட்டுக் கொண்டதற்கு, இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலர், கொழும்பில் உரை

19 ஆம் பக்கம் பார்க்க

# புதிய முறையின் கீழ் தேர்தல் சாத்தியமாகாது

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய தேர்தல் முறையின் கீழ் உடனடியாகத் தேர்தலை நடாத்த முடியாதென ஐ.தே.க. தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் கபீர் ஹாசிம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடாளுமன்றத்தில் சிறு

19 ஆம் பக்கம் பார்க்க

# முல்லை மக்களின் பேருந்து பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரத்திற்குள் சகல பேருந்துகளும் வந்து செல்வதற்கான வழிமுறைகளை உருவாக்கவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நகர மக்கள் போக்குவரத்து செய்வதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். முல்லைத்தீவு நகரத்திற்குள் பேருந்துகள் வருகை தருவதில் ஒழுங்கீனம் காணப்படுவதன் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கருகில் தற்போது பேருந்து நிலையம் இருப்பதன் காரணமாக பழைய பேருந்து நிலையம், சந்தை என்பன நகரத்தின் மத்தியில் உள்ளன.

ஆனால் பேருந்துகள் அனைத்தும் தற்போது ஒதுக்குப்புறத்திலுள்ள பேருந்து நிலையத்திற்கு வந்துசெல்வதன் காரணமாக நகரத்திற்கு வருகைதரும் மக்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போது கொக்குளாய்க்கு பயணிக்கும் பேருந்தே நகரத்திற்குள் வந்து மக்களை ஏற்றிச் செல்கின்றது. பேருந்து நிலையத்தின் நேரக்கணிப்பு நிலையத்தினை நகரத்தில் அமைப்பதன் மூலம் சகல பேருந்துகளும் நகரத்திற்கு வந்துசெல்லக்கூடிய நிலைமை உருவாகும்.


தற்போதுள்ள பேருந்து நிலையத்தில் பேருந்துகள் தரித்துவிட்டு நகரத்திற்குள் வந்து 10 நிமிடங் [illegible] தரித்துச்செல்வதன் ஊடா[illegible]ட்டத்திற்கான அனைத்துப[illegible]தி மக்களும் நகர மத்திக்கு வந்துசெல்லக்கூடிய வாய்ப்புண்டாகும்.

தற்போது[illegible]ள்ள போக்குவரத்து சீரின்[illegible]ணமாக சந்தை மற்றும[illegible]தக நிலையங்களுக்கு மக்கள் வந்து செல்லமுடியாத நிலைமை காணப்படுகின்றது.

நகரத்திற்குள் மக்கள் வருகை தராமையினால் வர்த்தக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பல வர்த்தக நிலையங்கள் மூடப்படும் அபாய நிலை உருவாகியுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன், அரச தனியார் பேருந்துகளை முல்லைத்தீவு நகரத்திற்குள் வருகைதந்து பயணிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், அதற்கான கலந்துரையாடல்களை நடாத்தவுள்ளதாகவும் தெரிவித்தார். (160)

# உதவும் கரங்கள் அமைப்பால் உணவுப் பொதி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

நெல்லண்டை வீதி தும்பளையில் அமைந்துள்ள கருணையுள்ள உதவும் கரங்கள் அமைப்பின் நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கும், மாணவர்களுக்கும் உணவுப் பொருட்களும், மாற்றுத் திறனாளிகளுக்கு கொடுப்பனவுகளையும் வழங்கி வைத்தார். இதன் போது கருணையுள்ள உதவும் கரங்கள் அமைப்பு வறு மைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு உதவி வழங்குவது போல வேறு அமைப்புக்களும் உதவி வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (18)

# வாக்காளர் பத்திரம் 15 முதல் விநியோகம்

எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் வாக்காளர் இடாப்பு தொடர்பான பத்திரத்தை கிராம சேவகர்கள் வீட்டுக்கு வீடு சென்று விநியோகிப்பர் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இப்பணி யூன் 15 ஆம் திகதி நிறைவு பெறும் என செயலகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் சேவை அவசியம் கருதி அக்காலம் நீடிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிராம அலுவலர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

கிராம அலுவலர் வழங்கும் பத்திரத்தைச் சரியாக நிரப்பி மீண்டும் கிராம அலுவலரிடம் கையளிக்க வேண்டும்.

இந்தப் பத்திரத்தில் கையொப்பமிடும் நடவடிக்கை தேர்தல்கள் ஆணையாளரால் செப்ரெம்பர் மாதம் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அடுத்த தேர்தலில் 2015 வாக்காளர் இடாப்பை பயன்படுத்த முடியும் என கூறப்பட்டுள்ளது.

# சுமைதாங்கிக் கற்கள் புனரமைக்கப்பட வேண்டும்

(வரணி)


எமது மூதாதையர் வாகன வசதிகளற்ற காரணத்தில் சுமார் நூறு ஆண்டு காலத்திற்கு முன் கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் ஆங்காங்கே சுமைதாங்கிகள் கட்டப்பட்டு கால்நடையாகச் சென்ற வரலாறுகளை தற்போதும் காணக்கூடியதாகவுள்ளது.

இவற்றுள் எருவன், அம்மா கடை, வாழைத் தோட்டம், கறுக்காய், முள்ளி போன்ற இடங்களில் தடயங்கள் உள்ளன. இவற்றுள் ஒரு சுமைதாங்கி வல்லிபுரம் ஆழ்வார் ஆலய சந்தியில் சிறு சேதத்துடன் காணப்படுகின்றது. இச் சுமைதாங்கி அருகே குடிநீர் கிணறும் அமைக்கப்பட்டு பயணிகள் களைப்பாறக்கூடிய வசதிகளும் எற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இச் சுமைதாங்கிகள் இன்று எமது இளைய தலைமுறையினருக்கு தெரியா வண்ணம் அழிக்கப்பட்டதால் எமது சந்ததிக்கு எமது முன்னோர் பட்ட துன்பம் தெரியாமல் போயுள்ளது.

இச் சுமைதாங்கிகளை சமூகப் பெரியவர்கள், புத்திமான்கள் உடன் கவனமெடுத்து புனரமைப்புச் செய்து இன்றைய இளம் தலைமுறையினருக்கு தெரியப்படுத்த வேண்டுமென நலன்விரும்பிகள் தெரிவிக்கின்றனர். (150)

# 30 ஆண்டுகளாக புனரமைக்கப்படாத கிளிநொச்சி வன்னேரிக்குளம் வீதி



கிளிநொச்சி வன்னேரிக்குளம் வீதி கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நிரந்தர புனரமைப்புகள் இடம்பெறாதநிலையில் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மேற்கின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள முக்கிய கிராமமான இக்கிராமம் 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. விவசாயக் கிராமமான இக்கிராமத்தில் தற்போது 500 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

கிளிநொச்சி நகரத்திற்கான போக்குவரத்துடன் மேற்படி வீதி முதன்மை பெறுகின்றது. இவ் வீதி வழியாக ஆனைவிழுந்தான் குளம், ஜெயபுரம் ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்துக்களும் இடம்பெறுகின்றன.

இந்நிலையில் இவ்வீதி புனரமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாவென கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதம பொறியியலாளர் வல்லிபுரம் ஜெயானந்தனிடம் கேட்டபோது,

மேற்படி வீதியினைப் புனரமைப்பதற்கான எந்தவித நிதியும் கிடைக்கவில்லை. ஆனால் ஆண்டுதோறும் மேற்படி வீதியை தற்காலிக புனரமைப்பு மேற்கொண்டுவருகின்றோம். நிதி கிடைக்கும்போது மேற்படி வீதியை நிரந்தர புனரமைப்புச் செய்வோமெனவும் தெரிவித்தார். (160)

# முனைப்பகுதி வெளிச்சவீடு மக்கள் பார்வைக்கு



(பருத்தித்துறை)

பருத்தித்துறை முனைப்பகுதி வெளிச்சவீடு சுமார் 20 வருடங்களின் பின்னர் வெசாக் தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது.

நீண்டகால வரலாற்று சின்னங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வெளிச்சவீடு வடமராட்சி பிரதேசத்தின் மிகமுக்கியமான வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாகும்.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக இதனை பார்வையிட முடியாமல் இருந்து வந்தது. இப்போதும் இப்பிரதேசம் பாதுகாப்பு படையினரின் கண்காணிப்பிலும் பராமரிப்பிலும் இருந்து வருகின்றது. இந்நிலையில் இதனை மக்கள் பார்வையிடுவதற்காக கடந்த ஞாயிற்றுக் கிழமை இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து பெருமளவான மக்கள் அந்த வெளிச்சவீட்டின் மேல் தளத்துக்குச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

# அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் செம்மணி இந்து மயானத்திற்கு 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

இந்நிதியினைக் கொண்டு மயானத்திற்கு சுற்று மதில் அமைப்பதற்காக மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நேற்று நண்பகல் 12.00 மணிக்கு அடிக்கல் நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில், கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன், கோப்பாய் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (08)

# மிதிபலகையில் பயணித்தவர் பலி

(வவுனியா)

வவுனியா - கனகராயன்குளம் பகுதியில் பயண்த்துக் கொண்டிருந்த பஸ்ஸில் இருந்து கீழே விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பேருந்தின் முன் கதவு மிதி பலகையில் சென்ற நபரே இவ்வாறு விழுந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த 56 வயது நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

விபத்தை அடுத்து பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குழாய்க்கிணறு பழுதடைந்தமையால் குடிநீருக்காக அவதியுறும் மக்கள்

(கிளிநொச்சி)

.கிளிநொச்சி, . கண்டாவளையின் கல்லாறுக் கிராமத்தில் குழாய்க்கிணறொன்று பழுதடைந்திருப்பதன் காரணமாக குடிநீருக்காக 5 கிலோமீற்றர் தூரம் பயணிக்கவேண்டியுள்ளதாக இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவப் பிரிவினால் அமைக்கப்பட்ட கிணறே பழுதடைந்திருப்பதாகவும், இக் கிணற்றினை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையெனவும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸிடம் கேட்டபோது, எம்மிடம் எவ்விதமான முறைப்பாடுகளும் தெரிவிக்கப்படவில்லை. கண்டாவளை பிரதேச செயலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தால் பிரதேச செயலகம்தான் குறித்த குழாய்க்கிணற்றினை புனரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தெரிவித்தார். (160)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தரமான கமுகங்கன்று
குறோட்டன்
தூதுவளை
30/=

தொடர்புகளுக்கு: 0776556494

(R/506)

### கடற்றொழிலாளர் விவகாரம்

# எல்லை மீறிய செயற்பாடுகளை நிறுத்திவிட்டு

# பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்திய கடற்றொழிலாளர்களின் தடை செய்யப்பட்டதும், எல்லை மீறியதுமான தொழிற் செயற்பாடுகளால் எமது கடற்றொழிலாளர்கள் பாரிய பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதுடன், எமது கடல் வளமும் அழிக்கப்பட்டு வருவதை நாம் தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வருவதுடன், இதற்கான நிரந்தரத் தீர்வு எட்டப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்தி வந்துள்ளோம். இந் நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ் இது தொடர்பில் அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார். எனினும், இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை மீறிய செயற்பாடுகள் நிறுத்தப்பட்ட நிலையிலேயே இவ் விடயம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது சாத்தியமாகுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள செயலாளர் நாயகம்,

பாரம்பரிய முறையிலான நாட்டுப் படகுகள், தடைசெய்யப்பட்ட மீன்பிடிக் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தாமல் கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள், எல்லை தாண்டியதாகப் பிடிபட்டால் அவரகளைக் கைது செய்யாமல் விடுவிக்க வேண்டும் என இலங்கை அரசிடமிருந்து எழுத்து மூல உறுதி பெற அரசு முயற்சிக்கும். எனினும், இந்த நிபந்தனைகளை மீறும் கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்படுவதை யாராலும் தடுக்க முடியாது என சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

எனினும், முதலில் இந்திய கடற்றொழிலாளர்கள் எல்லை மீறி தொழிலில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும். அதுவே எமது கடற்றொழிலாளர்களுக்கு நன்மையாக அமையுமென எதிர்பார்க்கலாம். அதே நேரம் இதனை அடிப்படையாகக் கொண்டு மேலதிக பேச்சுவார்த்தைகளைத் தொடர முடியும்.

ஒரே மொழி பேசும் கடற்றொழிலாளர்களுக்கு இடையிலான பிரச்சினை என்பதால், பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகள் எட்டப்பட வேண்டியுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இப் பிரச்சினை குறுகிய சுயலாப அரசியலுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், இந்தியத் தரப்பிலான தங்கள் சுய நலன்கள் பாதிக்கப்படும் என்பதால் அதிகம் கண்டுகொள்ளாமல் இருந்து வருகின்றனர். பாதிக்கப்படும் எமது கடற்றொழில்ாளர்கள் தொடர்பில் மனிதாபிமான முறையில் இவர்கள் பார்ப்பதில்லை.

எனவே, இதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு இந்தியத் தரப்பு முன்வர வேண்டுமென டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்த்திருவிழாவில் இசைக்கச்சேரி



(தீவகம்)

தீவகம் ஊர்காவற்றுறை தம்பாட்டி நுனிபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மனின் தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை காலை வெகு சிறப்பாக நடைபெற்றது.

அன்றைய தினம் இரவு "யாழ்.ராகம்" இசைக்குழுவினருடன் இணைந்து தென் இந்தியப் பாடகர் T.M.S.செல்வக்குமார் மற்றும் நாமக்கல் MGR ஆகியோர் கலந்து கொண்ட சிறப்பு இசைக்கச்சேரி ஒன்று நடைபெற்றதாகவும் பெருமளவான மக்கள் இசைக்கச்சேரியினை பார்த்து இரசித்து மகிழ்ந்தனர்.

இதேபோல் புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்திலும் சாந்தன் இசைக் குழுவின் இசைக்கச்சேரி கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றதாகவும் மேலும் அறியமுடிகின்றது.

# பேயாடிக்குளம் பொதுக்காணியை மீட்டுத்தருமாறு மக்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியா - பேயாடிகூழாங்குளம் பகுதி மக்கள், பொதுக் காணியை தமது கிராமத்தின் தேவைக்காக மீட்டுத் தருமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். வவுனியா ஏ9 வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள பேயாடிகூழாங்குளம் கிராமத்திற்கு சொந்தமான பொதுக் காணி, கலாசார அமைப்பொன்றுக்கு வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுவதுடன்.

பிரதேச செயலாளர் பொதுமக்களின் கோரிக்கைக்கு மாறாகவே இந்தக் காணியை வழங்கியுள்ளதாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமது கிராமத்திற்கு சொந்தமான இந்தக் காணியை கலாசார அமைப்புக்கு வழங்கியுள்ளமையால், தமது கிராமத்திற்கு பொது கட்டடங்கள் இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள் இந்த கிராமத்திற்கு பொதுகட்டடம், முன்பள்ளி, பாடசாலை கட்டடம் ஆகியன காணப்பட்ட போதிலும், அவை இராணுவ கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இதேவேளை, இந்தக் காணி சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டே வழங்கப்பட்டுள்ளதாகவும், இது. குறித்து ஏதேனும் பிரச்சினைகள் காணப்படுமாயின் அரசாங்க அதிபருக்கு அறிவிக்குமாறும் வவுனியா பிரதேச செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

# இரவீந்திரன் கலாசார மண்டபத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் சீரில்லை

### குற்றஞ்சாட்டுகின்றனர் பயனாளிகள்

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை வளாகத்தில் அமைநதுள்ள இரவீந்திரன் கலாசார மண்டபத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் சீராக இல்லை என மண்டபத்தினை பயன்படுத்துவோர் தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற குறித்த இம் மண்டபம் திருமண நிகழ்வு, சமய நிகழ்வுகள், மற்றும் பொது நிகழ்வுகளுக்கு வாடகைக்கு விடப்படுகின்றது. இதற்கு குறித்த கட்டணமும் அறவிடப்படுகின்றது.

ஆயினும் மண்டபத்தின் உள்ள மின் விசிறிகள் பல இயங்காத நிலையில் உள்ளன. சில குறைந்த வேகத்தில் மட்டுமே இயங்குகின்றன. அது மட்டுமன்றி மண்டபத்தின் வெளிப்புறத்தில் உள்ள மின் விளக்குகள் சில ஒளிர்வதில்லை எனவும் மேடையில் உள்ள திரைச்சீலை நிகழ்வுகளின போது திறந்து மூடுவதற்கு ஏற்றதாக இல்லையெனவும் திரைச்சீலையை ஒருவரும் கயிற்றினை ஒருவரும் இழுத்தாலே திரைச்சீலை மூட முடியுமனெவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படியாக பல குறைபாடுகளுடன் காணப்படும் மண்டபத்தினை வாடகைக்கு பெற்ற பின்பே அது பற்றி தாம் அறிந்து கொள்வதாக மண்டபத்தினை பயன்படுத்துவோர் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் இங்கு நடைபெற்ற நிகழ்வு ஒன்றுக்கு வந்திருந்தவர்கள் மின் விசிறிகள் சீராக இயங்காததால் பெரிதும் சிரமப்பட்டுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்களுக்கு முறையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மண்டபத்தின் நிலை குறித்து அதிகாரிகளோ பிரதேசசபை உறுப்பினர்களோ கண்டு கொள்வதில்லை என பயனாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.(54)

# மத்திய வங்கியின் பிராந்திய செயலகம் கிளிநொச்சியில் நாளை திறப்பு

இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய செயலகம் ஒன்று நாளை புதன் கிழமை கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளது. கிளிநொச்சி அறிவியல் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்தச் செயலகம் உத்தி[illegible]பூர்வமாக மீள் குடியேற்றம், மீள் நிர்மாணம் மற்றும் இந்[illegible]த்துறை அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனினால் திறந்து வைக[illegible]டவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் [illegible]ம விருந்தினராக கொள்கை திட்டமிடல் பொருளாதார துறை [illegible]ரதி அமைச்சர் ஹர்ஷா டீ சில்வா கலந்து கொள்வார். இது தவிர, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுனா மகேந்திரன் உள்[illegible] பல பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள் என நம்பப்படுக[illegible].

அதேவேளை, கொழும்பு பங்கு சந்தையின் பரிவர்தனை நடவடிக்கைகள், நல்லாட்சி மற்றும் புதிய வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் எதிர்வரும் திங்கட்கிழமை சம்மேளன கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் இந்த விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.







யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் 15 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவும் பீடாதிபதி ச. அமிர்தலிங்கத்தின் 'நவீன கல்விப் பிரயோகங்கள்' நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினரால் நூல் வெளியீட்டு வைக்கப்படுவதையும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மரம் நாட்டுவதையும் நிகழ்வில் வர வேற்பு நடனம் இடம்பெறுவதையும் காணலாம்.

சிந்திப்பதும் அதை வெளிப்படுத்துவதுமே நாமெல்லாம் மனிதர்கள் என்பதன் அடையாளம். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பொய்யான நம்பிக்கைகள்!

பகை மறந்து, நல்லிணக்கம் மூலம் இந்த நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமைகளோடும் சமமான அபிவிருத்திகளோடும் வாழக்கூடிய தீர்வு ஏற்பட வேண்டும்; அதுதான் சாத்தியமும் கூட என்பதே இன்று அதிகமானவர்களின் புரிதல் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் சிங்களவர்கள் அதற்குத் தயாரில்லை என்று இங்கிருந்துகொண்டே சொல்லிவிட்டு, மேலும் பகைவளர்த்தலே இங்கே தொடர்கிறது. இனங்களை முரண்படுத்தி வைத்திருத்தலே இவர்களுக்குத் தேர்தல் வெற்றிக்குத் தேவையாக இருக்கிறது.

பகையுணர்வை மறத்தலையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தும்போது, இனங்களுக்கிடையில் உணர்ச்சிகரமாகப் பேசி ஆவேச அரசியல் செய்ய முனைவோர் இதை அடிபணிதலாகவோ கீழ்ப்படிவதாகவோ சித்தரிக்க முற்படுகிறார்கள்.

ஏதோ நமது ரோசத்திற்கு இழுக்கு உண்டாவது போல பள்ளத்தில் கிடந்துகொண்டு மேட்டிமைத்தனம் பேசி, சமூகத்தை மேலும் அதலபாதாளத்திற்குத் தள்ளிச் செல்கிறார்கள்.

பகைமறப்பும் நல்லிணக்கமும் என்பது இங்குள்ள ஒவ்வொரு மனிதரதும் நன்மைக்காக, நமது நன்மைக்காக, நமது மக்களின் வாழ்வுக்காக என்பதைப் புரிந்துகொள்ளாவிட்டால், நாம் தொடர்ந்தும் உணர்ச்சிகர மடையர்களாகவே தேய்ந்து சிதைந்துகொண்டிருக்கப் போகிறோம் என்றே அர்த்தம்.

பகையையும் வெறுப்பையும் மேலும் மேலும் வளர்த்துக் கொண்டிருப்பதால் இந்த நாட்டின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரவோ தீர்வைக் கண்டுகொள்ளவோ முடியாதென்பதை எல்லோரும் அறிவோம். ஆனால் இணங்கிப்போக ரோசம் நம்மை விடுவதாயில்லை.

நம்மிடமுள்ள தமிழ் ரோசத்திற்காக, சமூகம் எந்தவித முன்னேற்றத்தையும் அடையாமல் தாழ்நிலையிலேயே கிடந்தாலும் பரவாயில்லை என்று இப்போதும் மற்றவர்களைப் பகைநிலைக்குத் தள்ளிச் செய்யும் அரசியலையே செய்துகொண்டிருக்கிறோம்; மாறவே மறுக்கிறோம்.

நமது மக்கள் எல்லா விதத்திலும் மற்றைய சமூகங்களுக்கு இணையாக உயர முடியாமல் தடுமாறுவதைப் பற்றிய கவலை இவர்களுக்கில்லை.

சர்வதேசத்திலுள்ள யாராவது எப்போதாவது இலங்கை அரசின் மீது கடுங்கோபம் கொள்ளும் வரை காத்திருப்போம். அதன்பிறகு அவர்கள் வந்து சிங்கள அரசை அடிபணிய வைக்கும் வரை எமது மக்களுக்கு அபிவிருத்தியோ முன்னேற்றங்களோ எதுவும் தேவையில்லை என்றே இவர்கள் அரசியல் செய்துவருகிறார்கள்.

அவற்றை அற்ப சலுகைகள் என் இழித்துப் பேசிவிட்டு, ஏதோ விடுதலைக்கான போராட்டம் வெகு தீவிரமாக நடந்து கொண்டிருப்பதைப் போலவும் தனிநாட்டுக்கு இணையான உரிமைகளை வெல்லும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதைப் போலவும் பொய் பேசி வருகிறார்கள்.

கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தால், மலையக மக்களின் குடியுரிமை பெற்றதிலிருந்து முஸ்லிம் மக்களின் சகலதுறை வளர்ச்சியும் பிரதேச அபிவிருத்திகளும் எந்த அணுகுமுறைக்குக் கிடைத்த பலன்கள் என்பதை விளங்கிக் கொள்வோம்.

வெள்ளைக்காரன் காலத்தில் தமிழர்கள் பெற்ற எழுப்பத்திற்குக் கூட, மற்றவர்களைவிட அவனுடனான இணக்கமான அணுகுமுறைகளில் நாம் முன்னின்றதே காரணம் என்பதை நம்மில் யாருக்கும் விளக்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

ஒவ்வொரு தேர்தலுக்கும் பிறகு சர்வதேசம் ஏதோ செய்யப் போகிறது என்று இவர்கள்தான் 'பேய்க்காட்டி' வருகிறார்கள். கடைசியாக வந்த அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியும், "இன்றுள்ள அரசு மோசமில்லை தானே, சென்று பேசுங்கள்" என்றுதான் அறிவுரை வழங்கிவிட்டுப் போயிருக்கிறார்.

கூட்டமைப்பு அரசியல்வாதிகளோ உண்மைநிலையை மக்களுக்கு மறைத்து, பொய்யான நம்பிக்கைகளை ஊட்டி காத்திருக்கச் செய்துவருகிறார்கள். - *ஆசிரியர்*

# காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்ய 4 விசேட குழு

காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கென இவ்வாரம் நான்கு விசேட குழுக்கள் அமைக்கப் படவுள்ளன.

இது தொடர்பான தகவலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்துள்ளதாக காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி விசாரணைக் குழுவை ஜனாதிபதி நியமிக்கவுள்ளார்.

ஜனாதிபதியிடம் அண்மையில் கையளித்த அறிக்கையில் விசாரணைக்கென நான்கு பேர் அடங்கிய நான்கு விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்துள்ளதாக காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு சுமார் 16,000 முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பின் பணிப்பாளருக்கு எதிராக குற்றச்சாட்டு

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் விக்ரமசிங்கவிற்கு எதிராக 12 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர் நாயகத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானமொன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 105 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

நாட்டின் அரசியல் சாசனத்திற்கு முரணான வகையில் பணிப்பாளர் நாயகம் செயற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டமை அரசியல் சாசன மீறலாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸியின் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து குற்றம் சுமத்தி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வெசாக் தினத்தில் விபத்து இருவர் பலி, 32 பேர் படுகாயம்

வெசாக் கொண்டாட்டங்களை பார்ப்பதற்காக சென்றபோது ஏற்பட்ட விபத்துக்களில் இருவர் பலியானதுடன் 32 பேர் காயமடைந்துள்ளனர். என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கருவலகஸ்வெவ என்னுமிடத்தில் லொறியும் டிரக்வண்டியும் மோதி விபத்துக்குள்ளான்தில் ஒருவர் பலியாகியுள்ளார். இந்த விபத்தில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த 22 பேரில் 10 ஆண்களும் 11 பெண்களும் அடங்குவர். அவர்கள், தெஹியத்தகண்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் இரண்டு வாகனங்களின் சாரதிகளும் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பொலன்நறுவை மஹியங்கனை வீதியில் சுதுன்புர என்னுமிடத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் மற்றும் லொறி மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலி யாகியுள்ளார்.

இதேவேளை, வெசாக் தினத்தன்று இடம்பெற்ற ஏனைய விபத்துக்களில் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

# நான்கு வருடங்களின் பின்னர் நாடு திரும்பியவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டுக்குச் சென்று நான்கு வருடங்களுக்குப் பின்னர் நாடு திரும்பிய ஒருவரை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அவரை, தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் நான்கு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டை ஹமன்கொடை என்னுமிடத்தில் 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது இந்திக்க சதுரங்க என்பவர் உயிரிழந்தார்.

இந்தக் கொலைச் சம்பவத்தின் சந்தேக நபர்களில் ஒருவரான இவர், வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளார். இவர் இல்லாமல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும் இவரை கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸாரின் உதவியும் கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில், வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு திரும்பிய சந்தேக நபர், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயற்சித்த போது அவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை, கண்டி நீதவான் நீதிமன்றத்தில் இன்று ஆஜர் செய்யவுள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

## பாலியல் சேஷ்டை புரிந்த கான்ஸ்டபிள் பணி நீக்கம்

எல்லவல பிரதேசத்தில் பஸ் ஒன்றுக்குள் யுவதி ஒருவர் மீது பாலியல் சேஷ்டை புரிந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட யுவதி மாத்தளை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை மாவட்ட குற்றப் புலனாய்வு அலுவலகத்தில் பணிபுரியும் நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் உடன் அமுலுக்கு வரும் வகையில் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## நேரடியான வெளிநாட்டு முதலீடுகள் மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்

மத்திய தர வருமானத்தை ஈட்டும் நாடு என்ற வகையில் இலங்கை வெளிநாட்டு உதவிகளையோ, அரசாங்கத்தின் சிறந்த வட்டி வீதம் மீதோ நம்பிக்கை வைக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் நேரடியான வெளிநாட்டு முதலீடுகளை அனுமதிப்பதன் ஊடாக பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்த முடியும் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.


இலங்கை கடந்த பல வருடங்களாக சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் மிகவும் அவதானத்துடன் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இதுதவிர, இலங்கைத் தீவை முதலீட்டாளர்களின் களமாக மாற்றுவதற்கும் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

(நேற்றைய தொடர்ச்சி)









**அன்று எவரை வாய்ச்சொல் வீரர் என தோலுரித்தார்களோ இன்று அவர் பாணியிலேயே உணர்ச்சிகரப் பேச்சாலும் நிறைவேறாத வாக்குறுதிகளாலும் மக்களைத் தூண்டி நாடாளுமன்றம் செல்வதும் தன் பதவியை தக்கவைப்பதுமே நோக்கமாக கொண்டவரை இந்த முன்னாள் மூத்த போராளி சிலாகித்துப் பேசுவது எவ்வளவு சிறுமைத்தனம்.**

# முன்பு பின் கதவால் செய்ததை இப்போது பகிரங்கமாக செய்ய முற்படுகின்றனர்....– 2

**■ மாதவன் சஞ்சயன்**

அன்று ஒரு துரையப்பா அழிக்கப்பட்டார். அதன் பின் எத்தனை துரையப்பாக்கள் எம்மிடையே உருவானார்கள். எதிர்ப்பரசியல் செய்தவர்கள் கூட தங்கள் தேவைகளுக்காக பின் கதவால் இணக்கம் காட்டினர், தமக்கு வேண்டியதைப் பெற்றனர், மக்களை அவலத்தில் விட்டனர்.

போராளிகளாக இருந்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் இணக்க அரசியல் செய்தவர்கள் கூட பேரம் பேசும் பலம் அற்றவர்களாகவே இருந்தனர். மக்களின் அவலங்களை தீர்க்கும் முழுமையான செயலை பிரபாகரன் முடிவிற்கு பின்பும் அவர்களால் செய்ய முடியவில்லை.

அரசியல் போராட்டத்திலோ ஆயுதப் போராட்டத்திலோ சம்பந்தப்படாத இரண்டும் கெட்டான்கள் செய்த இணக்க அரசியல் அவர்களையும் அவர்களின் வியாபாரங்களையும் தான் பலனடையச் செய்தது.

பிரபாகரனை வெல்ல அரசுக்கு உதவிய கருணா கூட இணக்க அரசியலால் கிழக்கில் பெரிதாக எதனையும் சாதிக்கவில்லை.

அவர் தப்பிப் பிழைத்ததே பெரும் பாக்கியம். அதனால் தன் இருப்பை காப்பாற்ற இணங்கி செயற்பட மட்டுமே அவரால் முடியும்.

வரலாற்றில் முதல் தடவையாக உருவான இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபை கூட ஆரம்பத்தில் இணக்க அரசியல் மூலமே உருவானது. ஆனால் அது இந்திய உத்தரவாதத்துடன் ஏற்படுத்தப் பட்டதால் இழுபறி கொண்டதாகவே இருந்தது. ஒப்பந்தம் போட்டதால் ஜே.ஆர் அதை நடைமுறைப் படுத்தும் கடப்பாட்டுக்கு விருப்பமின்றியே சம்மதித்தார்.

திருமலையில் மாகாணசபை அமைவதை தவிர்த்தால் தமிழ் ஆளுநர் தருவதாக பேரம் பேசினார். மறுத்தபோது இளைப்பாறிய இராணுவத் தளபதியை ஆளுநராக நியமித்தார். தன் பதவிக்காலம் முடியும் போது முழுமையாக எதனையும் அவர் பகிரவில்லை.

ஈழம் இல்லை ஆனால் எல்லாம் என கூறிய பிரேமதாசா ஜனாதிபதி தேர்தலில் வெல்வதற்காக மாகாண சபை கட்சி இணங்கி செயற்பட்டது. ஜனாதிபதியாக வந்த பிரேமதாசா ஏறிவந்த ஏணியை உதைத்து அதிகாரப் பகிர்வு பற்றி பல தடவைகள் பேசிய பெருமாளுடன் இணங்க மறுத்தார்.

முதல்வர் இந்தியாவிடம் முறையிட அதை முறியடிக்க, இந்தியப் படைகளை வெளியேற்ற புலிகளின் வாலைப் பிடித்தார் பிரேமதாசா. இறுதியில் அதனைக் கலைத்து தன் சுய முகத்தை காட்டினார். ஜே.ஆர் ஆரம்பித்து வைத்த சபைக்கு பிரேமதாசா சங்கூதினார்.

ஆரம்பம் முதலே அரசுகளுடன் பின்கதவு அரசியல் செய்து சுயநலன் பெற்ற மூத்த கட்சி தலைவரும் அவர் பின்தொடரும் இளவலும் தம் பட்டறிவால் மக்கள் நலனுக்காக எதிர்ப்பரசியலை கைவிட்டு இனி தாங்கள் இணக்க அரசியல் செய்யப் போவதாக புதிய மொந்தையை காட்டுகின்றனர். அவர்களுடன் கூட்டில் உள்ள கட்சிகள் என்ன முடிவில் இருக்கின்றன என்பது தான் இங்கு எழும் கேள்வி.

**அவர்களின் கடந்த கால அரசியலில் சுதந்திர கட்சியுடன் வாதாடுவதும் யு.என். பி.க்கு வாலாட்டுவதும் வரலாறாகும். சந்திரிகாவின் தீர்வுப் பொதியை தீயிட்டு கொளுத்துவதற்கு துணைபோனவர்கள் வாதாடி எதையும் பெறுவார்கள் என எப்படி நம்புவது. வழமை போல யு.என். பி.க்கு வாலாட்டினால் போடுவதை பொறுக்கத்தான் முடியும்.**

அண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் முன்னாள் மூத்த உறுப்பினர் தெரிவித்த கருத்தை நண்பர் ஒருவர் கூறக்கேட்டு ஆச்சரியப்பட்டேன். அந்த முன்னாள் அரசியல் போராளியும் இன்று அறப்படித்த பல்லியின் நிலையில் இருப்பதைப் பார்த்து கவலைப்பட்டேன்.

போராட்ட காலத்தில் அவர்கள் நடாத்திய தெருக்கூத்தை அப்போது மானிப்பாய் தெரு சந்தி மூலை முடுக்கெல்லாம் பார்த்து அவர்களின் யதார்த்த சிந்தனைகளால் கவரப்பட்டவன். கடந்த கால தமிழர் விடுதலை கூட்டணியின் பம்மாத்து அரசியலை புட்டுப்புட்டு வைப்பார்கள்.

அதில் ஒருவர் அமிர்தலிங்கம் பாணியில் பேசுவது தான் சுவாரசியம். தமிழ் ஈழம் என்று எழுதிய அட்டையின் முன் நின்று இளைஞர்களே அணிதிரள்வீர் அமைப்போம் தமிழ் ஈழம்.

எமக்கு ஆதரவாக தமிழகம் பொங்கி எழும் இந்தியா வரும் அமெரிக்காவுக்கும் அறிவித்து விட்டேன் இறுதிவரை போராடுவோம் ஓயமாட்டோம் மக்களை வழி நடாத்தி வாக்[illegible]மதாக்குவீர் துரோகிகள் தோற்கடி[illegible]ப்பட வேண்டும் என சே[illegible]ல் காலத்தில் மேடைகளில் அவர் பேசுவது போல அதே குரல் பாணியில் பேசி[illegible] அடுத்து ஜனாதிபதி என எ[illegible] அட்டையின் முன் நிற்கும் [illegible] ஆர் நடிகரை கண்டதும் பவ்வியமாக ஆங்கிலத்தில் 'யுவர் எக்சலன்சி வீ ஆர் ஆண்சரபிள் ரு அவர் பீபிள் யு[illegible]வ் சம்திங் ரு சற்றிஸ்வை அவர் பீபிள்' (அதிமேதகு ஜனாதிபதி அவர்களே எமது மக்களுக்கு பதில்கூற கடமைப் பட்டவர்கள் நாங்கள் அவர்களை திருப்திப் படுத்த ஏதையாவது தாருங்கள்) எனக் கேட்க, மாவட்ட சபை என எழுதிய அட்டையை ஜே.ஆர் நடிகர் தூக்கி போட அதை தூக்கிக்கொண்டு அனைவரும் ஆனந்தக் கூத்தாடுவர். ஒரு மூலையில் தமிழ் ஈழம் என எழுதிய அட்டைகை விடப்பட்டு புழுதியில் கிடக்கும். அப்போது பின் புலத்தில் "வாய் சொல் வீரர்... வாய் சொல் வீரர்" என கோசம் எழும்பும். பறை ஒலி அடங்கி அறைகூவல் விடுக்கப்படும்.

வாய்ச்சொல் வீணரை நம்பாதீர். மக்கள் மயப்பட்ட ஆயுதப் போராட்டமே வெல்லும். ஆதலால் அணிதிரள்வோம் வாரீர் என்ற அழைப்பு விடப்படும்.

அதைக் கேட்டு புல்லரித்து தம் பாடசாலை புத்தகங்களை கைவிட்டு கால் மாக்சும் லெனினும் மாக்சிம் கோக்கியின் தாய் நாவலும் மாணவர் கையில் ஏறியது.

அதைப் படித்து தெளிவு பெற்றவர்களில் ஒரு பகுதியினர் ஆயுதப் பயிற்சிக்கு தமிழகம் செல்ல மாதகல் கரையில் காத்திருக்க, ஏனையவர்கள் கிராமங்கள் தோறும் அரசியல் பிரிவாக செயற்பட தொடங்கினர்.

பின்பு நிகழ்ந்த காட்சிப் பிழைகள் பற்றி நான் கூறவேண்டியதில்லை. முள்ளிவாய்க்கால் வரை நடந்ததை நாம் அறிவோம். அத்தனையும் நேரில் பார்த்தும் கேட்டும் அறிந்த என் மனதில் அந்த மூத்த போராளியின் இன்றைய நிலைப்பாடு அறிந்து கவலை கொண்டேன்.

"இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன் மட்டும் தான் அரசியல் செய்கிறார்" என அவர் கூறியதை என் நண்பன் கூறக் கேட்டபோது மானிப்பாய் தெருக்களில் நடந்த கூத்து என் ஞாபகத்துக்கு வந்தது.

அன்று எவரை வாய்ச்சொல் வீரர் என தோலுரித்தார்களோ இன்று அவர் பாணியிலேயே உணர்ச்சிகரப் பேச்சாலும் நிறைவேறாத வாக்குறுதிகளாலும் மக்களை தூண்டி நாடாளுமன்றம் செல்வதும் தன் பதவியை தக்க வைப்பதுமே நோக்கமாக கொண்டவரை இந்த முன்னாள் மூத்த போராளி சிலாகித்துப் பேசுவது எவ்வளவு சிறுமைத்தனம். எனது இந்த மனநிலையில் தான் அன்று இதயசுத்தியோடு போராடப் புறப்பட்ட அதனை ஆதரித்த அனைவரும் இருப்பர்.

கொண்ட கொள்கை மாறி தன் தோழர்களை தலைவனை பலி கொண்டவரிடம் பதவிக்காக சரணடைந்து தியாகிகள் தினத்தை கைவிட்டு தான் மண்டியிட்ட பிரபாகரன் மனம் மகிழ தீபம் ஏற்றியவர் இன்று இணைந்திருக்கும் கூட்டமைப்பு தலைமை தான் இணக்க அரசியல் எனும் புதிய (பழைய) மொந்தயை பகிரங்கமாக தூக்குகிறது.

வாக்குகளுக்காக வசைபாடும் இவரை இணங்க வைக்க பதவி கொடுத்தால் போதும் அடக்கிவாசிப்பார். ஆனால் அல்லல் பட்ட மக்களுக்கு இணக்க அரசியல் மூலம் எதை பெற்றுக்கொடுக்கப் போகிறது அதன் தலைமை என்பது தான் கேள்வி.

அவர்களின் கடந்த கால அரசியலில் சுதந்திர கட்சியுடன் வாதாடுவதும் யு.என்.பி.க்கு வாலாட்டுவதும் வரலாறாகும். சந்திரிகாவின் தீர்வுப் பொதியை தீயிட்டு கொளுத்துவதற்கு துணைபோனவர்கள் வாதாடி எதையும் பெறுவார்கள் என எப்படி நம்புவது. வழமை போல யு.என். பி.க்கு வாலாட்டினால் போடுவதை பொறுக்கத்தான் முடியும்.

இணக்க அரசியல் என்பது இரந்து பெறுவதல்ல என்பதை பழைய தலைமை நிரூபிக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம். இவர்கள் இது வரை வெளிப்படையாக தூக்காத புதிய மொந்தையில் கொண்டு வருவதை.

# 19ஆம் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை

## நிதி அமைச்சர் தெரிவிப்பு



19ஆம் திருத்தச் சட்டம் இன்னமும் முழுமையாக அமுல்படுதப்படவில்லை என நிதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கடந்த 30ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட முன்னதாக திட்டமிடப்பட்டிருந்தது.

19ஆம் திருத்தச் சட்டம் குறித்த குழு நிலை விவாதத்தில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் இவற்றை உள்ளடக்குவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டு சட்டம் முழு வடிவம் பெற்றதன் பின்னரே சட்டத்தில் சபாநாயகர் கையொப்பமிடுவார் என அவர் குறிப்பிட்டுள்ளார். சபாநாயகர் உறுதிப்படுத்தும படும் வரையில் சட்டம் அமுல்படுத்தப்படக்கூடிய சாத்தியங்கள் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

19ஆம் திருத்தச் சட்டம் உத்தியோகபூர்வமாக அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்தாண்டுக்கு வரையறுக்கப்படுதல் மற்றும் அரசியல் சாசன பேரவை உருவாக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார். அமைச்சரவையின் எண்ணிக்கை 30 ஆக வரையறுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# வாக்காளர் இடாப்பு பதிவு விரைவில் பத்திரம் விநியோகம்

எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் வாக்காளர் இடாப்பு தொடர்பான ப்த்திரத்தை கிராம சேவகர்கள் வீட்டுக்கு வீடு சென்று விநியோகிப்பர் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இப்பணி ஜூன் 15ஆம் திகதி நிறைவு பெறும் என செயலகம் குறிப்பிட்டுள்ளது. எனினும் சேவை அவசியம் கருதி அக்காலம் நீடிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிராம சேவகர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. கிராம சேவகர் வழங்கும் பத்திரத்தை சரியாக நிரப்பி மீண்டும் கிராம சேவகரிடம் கையளிக்க வேண்டும்.

இந்தப் பத்திரத்தில் கையொப்பமிடும் நடவடிக்கை தேர்தல்கள் ஆணையாளரால் செப்ரெம்பர் மாதம் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அடுத்த தேர்தலில் 2015 வாக்காளர் இடாப்பை பயன்படுத்த முடியும் என கூறப்பட்டுள்ளது.

# தானம் வழங்குபவர் எனக்கூறி நிதி மோசடி செய்த பெண் கைது



தானம் வழங்குபவர் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு கிராமங்களில் உள்ள விகாரைகளில் மோசடியாக நிதி சேகரிப்பில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹற்றன் - நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் வைத்து அவர் கடந்த சனியன்று மாலை கைது செய்யப்பட்டதாக நோட்டன் பிரிஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் தமக்கு நிதி தொடர்பான வழக்கொன்று இருப்பதாகவும் அதில் தாம் வெற்றியடைந்தால் பாரியளவு நிதி கிடைக்கும் எனவும் குறித்த பெண் தெரிவித்துள்ளார். அவ்வாறு கிடைக்கும் நிதியை விகாரைகளுக்கு வழங்குவதற்கு எண்ணியுள்ளதாவும் சந்தேக நபரான பெண் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, சட்டத்தரணிக்கு வழங்க வேண்டிய நிதியையே தாம் சேகரிப்பதாக கூறி அவர் விகாரைகளில் மோசடியான வகையில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார். சில விகாரைகளில் சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான நிதி அந்தப் பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த சந்தேக நபரான பெண்ணை ஹற்றன் பதில் நீதவான் எஸ்.இராஜேந்திரன் முன்னிலையில் நேற்று ஆஜர்ப்படுத்தும் போது குறித்த பெண்ணை நாள்ளவரை விள்க்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# சோமவன்ஸவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் ஜே.வி.பி.



சோமவன்ச அமரசிங்க கட்சியில் இருந்து விலகியமை பாரிய நஷ்டமாகும், எனவே அவருடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள தாம் முயற்சிகளை மேற கொண்டு வருவதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

சோமவன்ச அமரசிங்க, முன்னாள் ஜனாதிபதி ஜனவரி 9ஆம திகதியன்று பதவியை தக்க வைத்துக்கொள்ள எடுத்த முயற்சி மற்றும் நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்ற ஜே.வி.பியின் இயலாமை போன்ற விடயங்கள் தொடர்பில் பிரச்சினைகளை எழுப்பியிருந்தார்,

எனினும் வேறுபல காரணங்களின் நிமித்தம் அந்த விடயங்களில் கவனம் செலுத்தமுடியாமல் போனது என்று அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். இதேவேளை சோமவன்ச அமரசிங்க கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலேயே விலகிச்சென்றுள்ளார் என்றும் அநுரகுமார சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆசன ஒதுக்கீட்டை பதிவு செய்ய அறிமுகமாகிறது தொலைபேசி

பஸ்களுக்கான ஆசன ஒதுக்கீடுகளை தொலைபேசியூடாக முற்பதிவு செய்து கொள்வதற்கான நடைமுறையை அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

நீண்டதூர சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகளில் பயணிப்பதற்கான ஆசனப்பதிவை தொலைபேசியூடாக முன்கூட்டியே மேற்கொள்ளமுடியும் என போக்குவரத்துத் தொடர்பான பிரதி பொது முகாமையாளர் ராஜா குணதிலக தெரிவித்தார்.

தற்போது மத்திய பஸ் நிலையத்திற்கு சென்று ஆசனங்களை பதிவு செய்யும் நடவடிக்கை காணப்படுவதாகவும் , இதன் காரணமாக பயணிகள் முகங்கொடுக்கும் சிரமங்களை தவிர்ப்பதற்கு ஏற்றவகையில் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய யாழ்ப்பாணம், திருகோணமலை, கல்முனை , அம்பாறை போன்ற தூர பகுதிகளுக்கு பயணிப்போர் தொலைபேசியூடாக தமது ஆசனப் பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்ள முடியும் எனவும் போக்குவரத்துத் தொடர்பான பிரதி பொது முகாமையாளர் ராஜா குணதிலக சுட்டிக்காட்டியுள்ளார்.

# நேபாளத்தில் 2,000பேருக்கு சிகிச்சையளித்தது இலங்கைக் குழு

நேபாளத்தில் உள்ள இலங்கை படையினர் அங்கு நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 2,000 பேருக்கு சிகிச்சை அளித்துள்ளதாக நிவாரணக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் மைத்திரி டயஸ் தெரிவித்துள்ளார்.

நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீதிகளை சரிசெய்து கிராமங்கள் நோக்கி தமது குழு சென்று கொண்டிருப்பதாக அவர் கூறினார். பொறியியலாளர் குழுவொன்று நேபாள் வந்துள்ளதால் தமது நிவாரணப் பணி மேலும் விரிவடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு அவர் தெரிவித்தார்.

# போலி பொலிஸ் அதிகாரி கையும் மெய்யுமாக கைது




உதவி பொலிஸ் அத்தியட்சக்ராக தம்மை அடையாளப் படுத்திக் கொண்டு பதுளை நகரில் விசாக பண்டிகை ஊர்வல நிகழ்வில் விசேட பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

அவர் பொலிஸ் அலுவலராக பணியாற்றிய காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட நிலையில் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தார். உதவி பொலிஸ் அத்தியட்சகரின் சீருடைக்கு சமனான உடையை அணிந்து கொண்டு ஏனைய பொலிஸ் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தல்களை வழங்கிவந்ததாக பதுளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், போலி பொலிஸ் அத்தியட்சகரின் தலைக்கவசம் மாறுபட்டதாகவும், சீருடை ஒழுங்கீனமாக இருந்ததன் காரணமாகவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்டவர் பதுளை கந்தேகெதர பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொலிஸ் அலுவலராக வவுனியா மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் பணியாற்றி வந்த குறித்த சந்தேக நபர் சேவைக்கு முறையாக சமுகமளிக்காதத்ன் காரணமாக கடந்த 2007 ஆம் ஆண்டு பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தார். அவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

# மது, இறைச்சி விற்பனை செய்த பலர் பொலிஸாரிடம் சிக்கினர்

(கொழும்பு)

விசாக பண்டிகை நாட்களில் அதிகவிலையில் விற்பனை செய்வதற்காக அனுமதிப் பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட 144 மதுபானப் போத்தல்களுடன் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட் டுக்கு அமைய நேற்றுக் காலை அவர்கள், காலி - உடுகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுபானப் போத்தல்களை கடத்திச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, வாத்துவ பிரதேசத்தில் கரையோர சுற்றுலா விருந்தகமொன்றில் அனுமதிப்பத்திரமற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 10 இலட்சம் ரூபா பெறுமதியான மதுபான வகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மதுவரித் திணைக்களத்தின் அதிகாரிகள் நேற்றுமுன்தினமிரவு மேற்கொண்ட சுற்றிவளைப்பிற்கு இணங்க மதுபானங்களுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இதனிடையே, விசாக பண்டிகை விடுமுறை நாட்களில் விநியோகத்திற்காக வைக்கப்பட்டிருந்த 100 கிலோ பன்றி இறைச்சியுடன் ஒருவர் வென்னப்புவ பொலிஸாரினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கைது இடம்பெற்றதாகவும், சந்தேகநபர் கைது செய்யப்பட்ட தருணத்தில் இறைச்சி விநியோகத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் கடந்த மாதம் 30. ஆம் திகதி தொடக்கம் நாளைவரை விசாக பண்டிகை வாரமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்போது, மதுபான சாலைகள், மாமிச விற்பனை நிலையங்கள், பந்தய ஒப்பந்த மையங்கள், கெசீனோ நிலையங்கள் மற்றும் களியாட்ட மையங்கள் என்பன மூடப்பட வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தக்காலப்பகுதியில் யாரேனும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின் அவர்கள் தொடர்பில் 0112 300 170 என்ற 24 மணிநேர விசேட இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு மதுவரித்திணைக்களம் அறிவித்துள்ளது.



அச்சுவேலி வடக்கு சித்திர வேலாயுதர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போது பக்தர்கள் தேர் இழுப்பதையும் தேர் வீதி உலாவருவதையும் பக்தர்கள் அங்கபிரதட்டையில் ஈடுபடுவதையும் காணலாம். (ப)

# ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றாக ஊடகங்கள் அமைந்திருக்கின்றன

## வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று உலக பத்திரிகை சுதந்திர நாள். நவீன ஜனநாயக நிலையில் ஜனநாயகத்தின் தூணகளில் ஒன்றாகவே ஊடகம் அமைந்திருக்கின்றது என வலி. மேற்கு பிர தேச சபை தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந் நாள் பத்திரிகை சுதந்திரத்தினை பரப்பும் நோக்கிலும் மனித உரிமைகள் சாசனத்தின் பகுதி 19 இல் இடம் பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தினை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் அமையத்தினால் சிறப்பு நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது. 1993 ஆம் ஆண்டில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச பையாக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி ஒவ்வோர் ஆண்டும் வைகாசி 3 ஆம் நாள் பத்திரிகை சுதந்திர நாளாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த வகையில் எமது தேசியம் நோக்கிய நகர்வுகளில் கடந்த காலத்தில் ஊடகங்கள் மிகப் பாரிய பணியினை மேற்கொண்டிருந்தமை இன்றும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருபவை இனத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகவே உள்ளது.

எமது இனத்தின் வரலாற்றில் பல இருண்ட யுகங்கள் பல அடக்கு முறைகள் இவற்றுக்கும் மேலாக எமது குரல்கள் ஓங்கி ஒலித்தபோதும் எமது உணர்வுகளை எடுத்துக் காட்ட முடியாத நிலை போன்ற பல சந்தர்ப்பங்களில் ஊடகங்கள் சிறப்பாக செயற்பட்டு உலக அரங்கில் எமது உரிமைக் குரல் ஒலிக்க வழி ஏற்பட்டது.

ஒவ்வோர் ஊடகவியலாளர்களும் ஓர் போராளியாகவே தொழிற்பட்டு செயற்படடனர். ஒவவோர் விடியலின் ஆரம்பங்களும் ஊடகவியலாளர்களின் பேனா முனைகளால் அலங்கரிக்கப்பட்டன.

இந் நிலையில் பல ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் திட்ட மிட்ட வகையில் சிதைக்கப்பட்டனர். கருவறுக்கப்பட்டனர். இவ்வாறான நிலையிலும் ஊடக பணி முழு மூச்சோடு செயற்பட்டது.

ஒடிந்து ஓய்வு நிலை நோக்கிய இனத்தின் நகர்வின் போதும விடியலின் தூரம் வெகு தொலைவில் இல்லை என்பதை அழுத்தி இனத்தின் விடுதலை நோக்கிய பயணத்தில் புதிய உணர்வையும் உறவையும் உருவாக்கி தலைவன் வழியில் இனத்தின் பாதச் சுவடுகளை அடியெடுக்க வழி சமைத்து வறலாற்றை புதிய நிலைக்கு நகர்வுறச் செய்ய பெரும் பணி இவ் ஊடகங்களுக்கே உரித்தானது.

பேனா முனைகளால் விடுதலைக்கு உரமூட்டி எம்முடன் இல்லாது இந்த இனத்தில் விடுதலை நாளை ஆவலோடு காத்திருக்கும் மறைந்த ஊடகவியலாளர்களை இப் பொன்னாளில் தழிழ் உணர்வுகளால் பூசித்து அவர்களின் நினைவாக ஓர் நினைவிடத்தை உருவாக்க ஒன்றிணைவோம் எனவும் குறிப்பிட்டார். (க)

# அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பெரியமாவடி அருள்மிகு உழுத்தம்புலம் விநாயகர் தேவஸ்தான அலங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்றுவருகின்றது.

எதிர்வரும் 12 ஆம். திகதி செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகத்துடன் இவ் உற்சவம் இனிதே நிறைவு பெறவுள்ளது.

தினசரி காலை 9.30 மணிக்கு உற்சவ கிரியைகள் ஆரம்பமாகும்.

இவ் அலங்கார உற்சவ விழா பிரதம குரு "தேசமான்ய" கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம் பெற்று வருகின்றது. (இ)

# நேர சூசிப்படி பஸ்கள் பயணத்தை ஆரம்பிப்பதில்லை

(வவுனியா)

வவுனியா டிப்போவிலிருந்து நேர சூசியின்படி பயணத்தை ஆரம்பிக்காமையினால் தனியார் பஸ் உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதாக வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளார் சங்கம் தெரிவிக்கின்றது.

வவுனியா தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தின் தலைவர் ஏ.டபிள்யூ ரசீன் இதனைத் தெரிவித்தார்.

# தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



தொழிலாளர் தினமாகிய கடந்த வெள்ளிக்கிழமை விவசாய கிராமத்திற்கு செல்லும் வீதியின் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்த டெனிஸ்வரன். உலக தொழிலாளர் தினத்தின் போது மன்னார் மாவட்டத்தில் விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்டு விளங்கும் கற்கிடந்த குளம் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியினை புனரமைக்கும் பணியினை வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

மன்னார் - மதவாச்சி ஏ-14 பிரதான வீதியின் கற்கிடந்த குளம் கிராம சந்தியில் இருந்து கற்கிடந்த குளம் தேவாலயம் வரை செல்லும் பிரதான வீதியானது மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் குறித்த கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர். இந்த நிலையில் குறித்த விவசாய கிராம மக்களின நலனைக் கருத்தில் கொண்டு குறித்த வீதியினை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இவ் வேலைத்திட்டத்தினை மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

## முரசின் இன்றைய பலன்

(05.05.2015 செவ்வாய்க்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 21 ஆம் திகதி.
பிரதமை - திதி. மரணயோகம்.
விசாக நட்சத்திரம் முற்பகல் 11.53 வரை. பின் அனுசம்.
இராகுகாலம் 02.56-04.26 வரை சுபநேரம் 10.26-11.56 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
வருமானத்தை அதிகரிப்பதற்கு புதிய யுக்தி முறைகளைக கையாளுதல்.

**ரிஷபம்**
கொடுக்கல் வாங்கலில் நிலவிய சிரமங்கள் வெகுவாக குறைவடைதல்.

**மிதுனம்**
கடன் சுமை மேலும் அதிகரிக்காமல் இருக்க நடவழக்கை எடுத்தல்.

**கடகம்**
நீர் மூலம் அவுஸ்ரேலியா செல்லும் முயற்சியை மனையாள் தடுத்துவிடல்.

**சிம்மம்**
குடும்பம் மற்றும் வெளிவட்டாரத்தில் உங்களின் பேச்சுக்கு மதிப்பு ஏற்படல்.

**மீனம்**
வெளிநாட்டு உறவினர் வருகையினால் குடும்பத்தில் குதூகலம் ஏற்படல்.

**கன்னி**
வியாழசுகம் இருப்பதினால் புதிய ஒப்பந்தத்தில் ஈடுபட விரும்புதல்.

**கும்பம்**
பந்தயங்கள், போட்டிகளில் உங்கள் முத்திரையைப் பதிக்க நேரிடும்.

**மகரம்**
சூழ்நிலைக்குத்தக்கபடி நடவழக்கைகளை மாற்றி அமைத்து விடுங்கள்.

**தனுசு**
கவலைகளைப் புறந்தள்ளும் நோக்கில் ஆத்மீகத்தில் நாட்டம் அதிகரித்தல்.

**விருச்சிகம்**
நண்பர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டாது காரியத்தில் கண்ணாக இருங்கள்.

**துலாம்**
சட்டத்திற்கு முரணாக நடந்தமையினால் தண்டம் பெறும் நிலை உருவாதல்.

IPL

**ஐ.பி.எல். இன்றைய ஆட்டம்**

மும்பை
எதிர்
டில்லி

இடம் :- மும்பை
நேரம் :- இரவு 8.00 மணி

# ஜமைக்கா அணியை வென்றது அமெரிக்கா





பஹமாஸ் நாட்டில் உள்ள நசாவுவில் சர்வதேச தடகள பெடரேசன் சங்கம் (ஐ.ஏ.ஏ.எப்.) சார்பில் உலக ஓட்டப் பந்தயப் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்ற உசேன் போல்ட் தலைமையிலான ஜமைக்கா அணி 4x100 ஓட்டத்தில் அமெரிக்காவிடம் தோல்வியடைந்தது.

அமெரிக்காவைச் சேர்ந்த மைக் ரோட்ஜர்ஸ், ஜஸ்டின் காட்லின், டைசன் கே ஆகிய மூன்று பேர் முதல் மூன்று நூறு மீற்றரில் ஜமைக்கா வீரர்களை முந்திக் கொண்டு வந்தனர்.

இதனை பயன்படுத்தி 4 ஆவது வீரராக ஓடிய ரியான் பெய்லி பந்தைய தூரத்தை 37.38 வினாடிகளில் கடந்து முதல் இடத்தைப் பிடித்தார். ரியான் பெய்லியை நெருங்கி வந்த போல்ட் 37.68 விநாடிகளில் தான் பந்தைய தூரத்தைக் கடந்தார்.

எட்டு நாடுகள் கலந்து இந்தப் போட்டியில் ஜப்பான் மூன்றாவது இடத்தைப் பிடித்தது. இதனால் இந்த மூன்று அணியும் 2016 ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கு நேரடியாக தகுதிப் பெற்றது.

# தொடரைச் சமன் செய்தது மேற்கிந்திய தீவுகள் அணி



இங்கிலாந்து அணிக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை சமன் செய்தது.

மேற்கிந்திய தீவுகள் சுற்றுப் பயணம் சென்ற இங்கிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

முதலிரண்டு டெஸ்டின் முடிவில், இங்கிலாந்து அணி 1-0 என முன்னிலை வகித்தது. இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட போட்டி பார்படாசில் நடந்தது. இதில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 257 ஓட்டங்கள் எடுத்தது. இதில் அணித்தலைவர் குக் (105) சதம் அடித்தார். மொயின் அலி (58) அரைசதம் அடித்தார்.

மேற்கிந்திய தீவுகள 189 ஓட்டங்கள் எடுத்தது. இதில் பிளாகவுட் (85) அரைசதம் எடுத்தார். பந்துவீச்சில் இங்கிலாந்து வீரர் அண்டர்சன் 6 விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

பின்னர் 68 ஓட்டங்கள் முன்னிலையில் 2 ஆவது இனிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி, 123 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால் மேற்கிந்திய தீவுகளுக்கு வெற்றி இலக்காக 192 ஓட்டங்கள் கொடுக்கப்பட்டது.

எளிய இலக்கை நோக்கி 2 ஆவது இனிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு பிராத்வைட் (25), ஹோப் (9), சாமுவேல்ஸ் (20), சந்தர்பால் (0) ஏமாற்றினர்.

அபாரமாக ஆடிய டேரன் பிரர்வோ (82) அரைசதம் கடந்தார். இவருக்கு பிளாக்வுட் ஒத்துழைப்பு தந்தார். இதனால் இரண்டாவது இனிங்ஸில் மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுக்கு 194 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

பிளாக்வுட் (47), அணித்தலைவர் ராம்தின் (0) அவுட் டாகாமல் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை மேற்கிந்திய தீவுகள் அணி 1-1 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது.

# 400 ஓட்டங்களை குவித்த முதல் விரர் ரஹானே




ராஜஸ்தான் வீரர் ரஹானே, இந்த ஐ.பி.எல். தொடரில் 400 ஓட்டங்கள் குவித்த முதல் வீரர் என்ற மைல்கல்லை எட்டியுள்ளார்.

டில்லி அணிக்கு எதிரான போட்டியில் அசத்திய ரஹானே, 54 பந்துகளில் 91 ஓட் டங்கள் (3 சிக்சர்கள், 9 பவுண்டர்கள்) எடுத்தார்.

இதன் மூலம் இந்த தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களுக்கான செம்மஞ்சள் தொப்பியை பெற்றார்.

இவர், 10 போட்டியில் 4 அரைசதம் உட்பட 430 ஓட்டங்கள் எடுத்து, முன்னிலை வகிக்கிறார்.

# வித்தியாசமான முறையில் வெற்றியை கொண்டாடிய டுமினி


ஐ.பி.எல் தொடரில் பஞ்சாப் அணிக்கு எதிரான வெற்றியை டெல்லி அணித்தலைவர் டுமினி வித்தியாசமான முறையில் கொண்டாடியுள்ளார்.

பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் டில்லி அணி சிறப்பாக செயற்பட்டது. இதனால் 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியைத் தொடர்ந்து டில்லி அணி வீரர்கள் கொண்டாட்டங்களில் ஈடுப்பட் டுள்ளனர்.

அப்போது டில்லி அணித்தலைவர் டுமினி, ஒரேஞ்சு நிற ஜெய்ப்பூர் சேலையை கட்டிக்கொண்டு கலக்கியுள்ளார்.



# அரையிறுதியில் ஜோஷ்னா




ஆசிய சீனியர் தனிநபர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் தொடரின் அரையிறுதிக்கு இந்திய வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பா முன்னேறினார். மற்றொரு இந்திய வீராங்கனை தீபிகா பல்லீகல், காலிறுதியில் தோல்வி அடைந்து வெளியேறினார்.

குவைத்தில், 18 ஆவது ஆசிய சீனியர் தனிநபர் ஸ்குவாஷ் சம்பியன்ஷிப் தொடர் நடக்கிறது. இதன் பெண்களுக்கான காலிறுதியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா, ஹாங்காங்கின் ஜோய் சான் மோதினர்.

ஒரு மணி நேரம் 10 நிமிடம் வரை நீடித்த காலிறுதியின் முடிவில், இந்தியாவின் ஜோஷ்னா 3-2 (11-8, 11,- 13, 9-11, 11-9, 11-7) என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். அரையிறுதியில் ஜோஷ்னா, மலேசியாவின் நிகோல் டேவிட் மோதுகின்றனர்.

# மோசமான சாதனையை படைத்த ஷேவாக்



பஞ்சாப் அணியின் அதிரடி ஆட்டக்காரரான ஷேவாக், நடப்பு ஐ.பி.எல். போட்டியில் தொடர்ச்சியாக சொதப்பி வருகிறார்.

சரியான தொடக்கம் அமையாததால் பஞ்சாப் அணியும், தொடர் தோல்வியைத் தழுவி வருகிறது.

ஷேவாக் கடந்த 4 இனிங்சில் மொத்தமாக சேர்த்து (1,1,1,2) 5 ஓட்டங்களே எடுத்துள்ளார்.

மேலும், முதல் ஓவரிலே இதுவரை 13 முறை ஆட்டமிழந்துள்ளார்.

இதன் ஐ.பி.எல். தொடரில் அதிகமுறை முதல் ஓவரில் ஆட்டமிழந்த முதல் வீரர் என்ற மோசமான சாதனையைப் படைத்திருக்கிறார்.

# கரப்பந்தாட்ட போட்டி இரு அணிகள் வெற்றி

சிறுப்பிட்டி கலை ஒளி விளையாட்டுக் கழகம் நடாத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் பி அணியும் மட்டுமவில் மோகனதாஸ் அணியும் வெற்றி பெற்றுள்ளன.

ஆவரங்கால் இந்து இளைஞர் பி அணியும் புத்தூர் சோமஸ கந்தா விளையாட்டுக் கழக அணியும் மோதிய இரண்டு சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் முதல் சுற்றில் இரண்டு அணிகளும் மாறிமாறிப் புள்ளிகள் பெற்ற வண்ணம் இருந்தன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் ஆட்ட நேர முடிவில ஆவரங்கால் இந்து இளைஞர் பி. அணி 25 :20 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் சுற்றில் வெற்றி பெற்றது.

இரண்டாம் சுற்றில் வெற்றி பெற்றால் போட்டியை சமன் செய்யலாம் என்ற நிலையில் புத்தூர் சோமஸ்கந்தா அணி களமிறங்கியது. மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இரண்டாம் சுற்றிலும் புத்தூர் சோமஸ்கந்தா அணியால் வெற்றிபெற முடியவில்லை. ஆவரங்கால் இந்து இளைஞர் பி அணி 25 :21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மற்றைய இரு அணிகளுக்கு இடையிலான போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக கழக அணியும் ஆவரங்கால் இந்து இளைஞர் பி அணியும் மோதிய இரண்டு சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் முதல் சுற்றில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி வீரர்களின் திறமைக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆவரங்கால் இந்து இளைஞர் பி அணி வீரர்களும் புள்ளிகள் பெற்றார்கள்.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி 25 :22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாம் சுற்றிலாவது வெற்றி பெற வேண்டும் என்ற இலக்குடன் களமிறங்கிய்து ஆவரங்கால் இந்து இளைஞர் பி அணி மட்டுவில் மோகன தாஸ் அணி வீரர்களுக்கு நிகராக ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வீரர்களும் போராடினார்கள்.

ஆட்ட நேர முடிவில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி 25 :21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. நடைபெற்ற இரண்டு சுற்றுப் போட்டிகளிலும் மட்டுவில் மோகனதாஸ் அணி 2:0 என்ற சுற்றுக்கள் அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது.

மேற்படி போட்டிகள் சிறுப்பிட்டி கலை ஒளி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மின்னொளியில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (93)

# போட்டி அட்டவணையை உறுதிப்படுத்தக் கோரிக்கை

இருபாலை விளையாட்டுக் கழகம் நடாத்தும் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் அணிகளை நேர அட்டவணையை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி கழகம் 6 பேர் பங்கு பற்றும் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியினை நடாத்த வுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு பற்றவுள்ள விளையாட்டுக் கழகங்கள் 0777743396 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேர அட்டவணையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேற்படி கிரிக்கெட் போட்டிகள் இருபாலை விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது.

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

ஆடி விழாவினை முன்னிட்டு அராலி களவளத்துறை விளையாட்டுக் கழகம் 7 பேர் பங்கு பற்றும் 12 ஓவர்கள் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடாத்தவுள்ளது.

மேற்படி போட்டிக்கு பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழக அணிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் 0775324972 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கிரிக்கெட் - கரப்பந்து போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 96 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்படவுள்ள் கிரிக்கெட், கரப்பந்தாட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

மேற்படி போட்டிகள் அமரர்களான சுப்பிரமணியம் கௌசிகன், சுப்பிரமணியம் இதயராஜ் ஞாபகார்த்தமாக 4 ஆவது வருடமாக் இப் போட்டிகள் நடாத் தப்படவுள்ளன.

இதில் கிரிக்கெட் போட்டி 6 பேர் பங்குபெறும் 5 ஓவர்களைக் கொண்ட போட்டியாக நடாத்தப்படவுள்ளது.

கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி வடகிழக்கு மாகாண ரீதியில் நடாத்தப்படவுள்ளது. (ஓவர் கேம், செற் அப்)

மேற்படி போட்டிகளில் பங்குபெற விரும்பும் அணிகள் நாளை மறுதினத்திற்கு முன்னர் மேற்படி சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும், வெற்றியீட்டும் அணிகளுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடெங்கிலும் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் முகமாகவும், இளைஞர்களின் விளையாட்டுத்துறையினை ஊக்குவிக்கும் முகமாகவும் கடந்த சனிக்கிழமை விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மன்னார் மாவட்டத்தில் உள்ள 191 இளைஞர் விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப் பட்டன.

மன்னார் மற்றும் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட 105 விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மதியம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இதன் போது இளைஞர்களின் தொழிற் பயிற்சி,கலை கலாசாரம், போன்றவை கண்காட்சியாக காண்பிக்கப் பட்டது.

அதேவேளை மடு, நானாட்டன், முசலி ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 86 விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக் கிழமை மாலை சிலாபத்துறை பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாண பணிப்பாளர் என்.எம்.முனவ்பர் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக அமைச்சர் றிசாத் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹினைஸ் பாரூக்,வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், முசலி பிரதேச சபை தலைவர் எம்.எஹியான்,மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

# விளையாட்டுப் போட்டி

புலோலி தென்மேற்கு புலோலி கந்த முருகேசனார் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் கந்தமுருகேசனர் சனசமூக நிலையத் தலைவர் பாலகிருஷ்ணன் இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும். மேற்படி போட்டியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (18)

# பாரதி முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி







(வவுனியா)

கனகராயன்குளம் பாரதி முன்பள்ளி மழலைகளின் விளையாட்டுப் போட்டி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வு சசி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், வன்னி எம்.பி.சிவசக்தி ஆனந்தன், வவுனியா வடக்கு முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் இராஜேஸ்வரன், ஆரம்ப பாடசாலை அதிபர் பாலகிருஸ்ணன், நெடுங்கேணி பிரதேச சபை உபதவிசாளர் தணிகாசலம், உறுப்பினர் ஜெயரூபன், கனகராயன்குளம் ம.வி அதிபர் நித்தியானந்தன், கனகராயன்குளம் வடக்கு கிராம சேவையாளர் பிறேம்லா, முன்பள்ளிச் சிறுவர் உத்தியோகத்தர் கீர்த்தனா, அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (160)

# ஜே.வி.பி–யின் ஏப்ரல் கிளர்ச்சியின் 44 ஆண்டு நிறைவில் சில நினைவுகள்

4 - முருகபூபதி -



**1971** ஏப்ரலில் மிகவும் கொடூரமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டது மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டம். நதிகளில் மிதந்த சடலங்கள், பொலிஸ் நிலையங்களின் பின்வளவுகளில் எரிக்கப்பட்ட சடலங்கள், ரயர்களுடன் கொளுத்தப்பட்ட இளம் உயிர்கள். கூட்டிக்கழித்துப் பார்த்தால் 25 ஆயிரத்தையும் தாண்டும் அவற்றின் எண்ணிக்கை.

ரோஹண விஜேவீராவின் மனைவி சித்ராங்கனியும் ஐந்து பிள்ளைகளும் இன்னமும் அரச பாதுகாப்பில் ஒரு கடற்படை முகாமில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். மூத்த பெண்பிள்ளை ஈஷா புத்தி பேதலித்து தனது தாயையும் தம்பியையும் தாக்கியதனால் பெற்றதாயினால் பொலிஸில் முறையிடப்பட்டு காவலில் வைக்கப்பட்டாள்.

கதிர்காமம். இலங்கையின் தென்மாகாணத்தில் புனிதமான பிரதேசம் என பிரகடனப்படுத்தப்பட்ட இந்த மண்ணில் ஒரு காலத்தில் வேடர்கள் வாழ்ந்தனர். 125 ஆயிரம் வருடத்திற்கும் மேற்பட்ட காலத்திற்கு முன்னர் இருந்தே அங்கு வற்றாத ஜீவநதியாக ஓடிக்கொண்டிருக்கிறது மாணிக்க கங்கை. முருகனை தமிழ்க்கடவுள் எனச் சொல்கிறார்கள். அவர் மணம் முடித்த வள்ளி வேடுவர் இனத்தைச் சேர்ந்தவள்.

எங்கிருந்தோ வந்து வள்ளியை மணம் முடித்து அழைத்துச்சென்ற முருகனை சிங்கள பௌத்த மக்கள் கதரகம தெய்யோ என அழைக்கிறார்கள். இங்கு தெய்வானைக்கும் தனியாக ஒரு கோயில் இருக்கிறது. செல்லக்கதிர்காமத்தில் பிள்ளையார் குடியிருக்கிறார்.

பால்குடி பாபா என்ற ஒரு இஸ்லாமியரின் சமாதியும் இருக்கிறது. இதனால் இந்து, பௌத்த, இஸ்லாமிய மக்களின் புனித பூமியாகத் திகழுகின்றது.

கதிர்காமத்திற்கு வந்த முருகன் வள்ளியின் அழகில் மயங்கி மணம் முடித்திருந்தால் அந்த அழகு அவளுடன் அந்த ஊரைவிட்டுப் போய்விடப் போவதில்லை. வள்ளி எப்படி முருகனுக்கு 'அழகியோ - அதுபோன்று அந்த ஊர்மக்களுக்கும் 1949 ஆம் ஆண்டில் ஒரு அழகி பிறந்தாள் அவள் பெயர் பிரேமாவதி மனம்பேரி. பத்துப்பேர் கொண்ட அவளது குடும்பத்தில் அவள் மூத்த பெண்.

இன்றும் உலகெங்கும் அழகிப் போட்டிகள் நடக்கின்றன. அதே சமயம் பெண்ணியவாதிகள் இந்தப் போட்டிகளை கண்டித்துக் கொண்டிருக்கிறார்கள். உலக அழகிகளுக்கும் புகழ் மங்குவதில்லை.

அப்படியாயின் ஒரு கிராமத்து அழகியின் புகழ் அக்கிராமத்தில் எப்படி இருந்திருக்கும்...?

பிரேமாவதி மனம்பேரி அழகியாக இருந்து உலகம் அறியப்பட்டவள் அல்ல. கொடூரமான வல்லுறவினால் நிர்வாணமாக்கப்பட்டு நடுவீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டதனால் அறியப்பட்டாள்.

இலங்கையில் கோணேஸ்வரி, கிருஷாந்தி உட்பட பல பெண்கள் ஆயுதப்படையினரால் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதற்கான வரலாறுகள் இருக்கின்றன. அந்த வரலாற்றின் முதல் அத்தியாயத்தில் இருப்பவள் கதிர்காமம் பிரேமாவதி மனம்பேரி.

அவள் க.பொ.த. சாதாரண தரம் வரையில் பயின்றாள். பின்னர் பௌத்த தஹம் பாடசாலையில் குழந்தைகளுக்கு பௌத்த தர்மம் போதிக்கும் ஆசிரியையாக பணியாற்றினாள். தனது 20 வயதில் கதிர்காமத்தில் 1969 ஏப்ரல் மாதம் நடந்த புது வருடப்பிறப்பு கொண்டாட்டங்களில் நடந்த அழகுராணி போட்டியில் கலந்துகொண்டு இரண்டாவது பரிசு பெற்றாள்.



Premavathy Manampery



Premavathy Manamperi



அவளது கட்டுக்குலையாத அழகினால் சிநேகிதிகளின் தூண்டுதலுடன் 1970 இலும் போட்டிக்கு வந்தாள். இம்முறை அவள் முதலாவதாக தெரிவுசெய்யப்பட்டாள்.

ஊரில் அவள்தான் பேரழகி என்ற பிம்பம் சரியாக ஒரு வருடத்தில் அதே ஏப்ரல் மாதம் இல்லாது ஒழிக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியில் இணைபவர்கள் ஐந்து வகுப்புகளில் பயில வேண்டும் என்பது கட்டாயமாக இருந்தது. இறுதி வகுப்புதான் ஆயுதப்பயிற்சி. அனைத்து விடுதலை இயக்கங்களும் சாதாரண துவக்குகளை வைத்துக்கொண்டு ஆரம்பமான அமைப்புகள்தான். அரச ஆயுதப்படைகளிடம் இருக்கும் ஆயுதங்களை கைப்பற்றுவதும் அவற்றின் போர்த்தந்திரங்களில் ஒன்று.

மனம்பேரியும் ம.வி.முன்னணியில் இணைந்தாள். இயக்கத்திற்கு சீருடைகள் தைத்துக்கொடுத்தாள். அவள் இலங்கையில் ஏற்றத் தாழ்வற்ற ஒரு சமதர்ம ஆட்சி மலரும் என்றே நம்பியிருந்தாள். அவளது அழகிற்கு எங்காவது பெரிய இடத்தில் மணம் முடித்துப் போயிருக்கலாம். ஆனால், அவள் நம்பியது மக்களுக்காக உருவாக்கப்பட்ட விடுதலை இயக்கத்தைத்தான்.

மக்கள் விடுதலை முன்னணி 1971 ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி தென்னிலங்கையிலிருக்கும் பொலிஸ் நிலையங்களை ஒரே சமயத்தில் தாக்குவதற்கு திட்டம் தீட்டியது. கதிர்காமம் பொலிஸ் நிலையமும் தாக்கப்பட்டது. பொலிசாரால் அந்த கெரில்லாத் தாக்குதல்களை எதிர்கொள்வது முடியாது என்பதை அறிந்த அன்றைய ஸ்ரீமாவின் அரசு இராணுவத்தை கிளர்ச்சி தொடங்கிய பிரதேசங்களுக்கு அனுப்பியது. கதிர்காமம் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு பத்து நாட்களில் பின்னரே அங்கு இராணுவமுகாம் அமைக்கப்பட்டது.

லெப்டினன் விஜேசூரியா அங்கு தலைமை ஏற்றதும் தேடுதல் வேட்டை தொடர்ந்தது.

லெப்டினன் விஜேசூரியா கதிர்காமத்தில் அந்த இயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்தவர்களையெல்லாம் தேடத் தொடங்கியபொழுது எப்படியோ மனம்பேரியின் பெயரும் கிடைத்திருக்கிறது. அவ்வேளையில் கதிர்காமத்திலிருந்த போராளிகள் காடுகளுக்குள் பின்வாங்கினர். ஆனால், மனம்பேரி ஒரு பெண் என்பதால் அவளை கைவிட்டுச் சென்றனர்.

ஆனால் - அவளைக் கைதுசெய்த விஜசூரியா தனது கைவரிசையை அவளிடம் காண்பித்தான். அவள் சித்திரவதை செய்யப்பட்டாள். அவளும் அவளுடன் பிடிபட்ட மேலும் சில பெண்களும் வல்லுறவுக்குள்ளாகினர். விஜேசூரியா மட்டுமல்ல மேலும் சில இராணுவத்தினரும் அவளை சூறையாடினர்.

(தொடரும்)

## மஞ்சளின் மகத்துவம்



மூன்று முக்கிய மஞ்சள் வகைகள்: முட்டா மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், விரலி மஞ்சள்.

முட்டா மஞ்சள் : இது சற்று உருண்டையாக இருக்கும். இதை அரைத்தோ, கல்லில் உரைத்தோ முகத்திற்குப் பூசுவார்கள்.

கஸ்தூரி மஞ்சள்: இது வில்லை வில்லையாக, தட்டையாக இருக்கும். வாசனை நிறைந்தது.

விரலி மஞ்சள்: இது நீளவடிவில் இருக்கும். இதுதான் கறிக்குப் போடும் மஞ்சள்.

மஞ்சளின் பயன்கள்:

- சிறந்த நுண்ணுயிர்க் கொல்லியாகப் பயன்படுகிறது.
- பச்சை மற்றும் மஞ்சள் கிழங்கிலிருந்து எண்ணெய் வடிக்கப்படுகிறது. இந்த எண்ணெய் நச்சுத்தடை செய்யும் தன்மை கொண்டது.
- உணவுப் பொருட்களைக் கெட்டுப் போகாமல் பாதுகாக்கிறது.
- பல நோய்களுக்கு மருந்தாகவும், நிவாரணியாகவும் பயன்படுகிறது.
- வயிறு தொடர்பான அனைத்து நோய்களையும் போக்குகிறது.
- இறைச்சியின் என்சைம் கெட்டுப் போகாமல் நீண்டநேரம் பாதுகாக்கிறது.
- ஜப்பானில் ஓகினாவா என்ற இடத்தில் தேநீர் ஆகவும் பயன்படுத்தப்படுகிறது.
- மஞ்சள்தூள் உணவில் சேர்ப்பதால் வயது முதிந்தவர்களுக்கு ஏற்படும் நினைவுக் குறைபாடு, "அல்சமைர்" நோய் உள்ளவர்களின் மூளையில் ஏற்படும் கெடுதல் தரும் படிவைக் குறைக்கின்றது என்று துவக்க நிலை ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு. மேற்கு என்று ஜேர்மனி பிளவுபட்டது போல அதன் தலைநகரம் பேர்லினும் பிளவுபட்டுக் கிடந்த நேரம். இரண்டிற்கும் பெரும் பகை.

ஒருசமயம் பேர்லினின் கிழக்குப் பகுதியினர் (கிழக்குப் பேர்லின் பொருளாதாரத்தில் நலிந்த பகுதி. அங்கு எதற்கும் தட்டுப்பாடு) மேற்கு ஆசாமிகளுக்கு ஓர் "அன்பளிப்பு" அனுப்ப ஆவல் கொண்டனர்.


ஒரு பாரவூர்தி நிறைய குப்பைக் கழிவுகள் மற்றும் என்னென்ன அசிங்கங்களோ எல்லாவற்றையும் ஏற்றி மேற்குப் பகுதிக்குள் கொண்டு போய் நிறுத்தி, "இதோ உங்களுக்கு எங்கள் பரிசு!" என்று கொட்டிக் குவித்தனர்!

இதற்குத் தக்க பதிலடி தர மேற்குப் பகுதியினர் முனைந்தனர். அவர்கள் பகுதியின் குப்பைகளைச் சேகரிக்க முயன்றனர். ஆனால் அவர்களிடையே ஓர் அறிஞர் இருந்தார்.

அவர் மேற்குப் பகுதி மக்களிடம் அமைதியாகப் பேசினார். அவர் பேசியதைக் கேட்ட மக்கள் இறுதியில் முகத்தில் வியப்புக்குறி தோன்ற கட்டை விரலை உயர்த்தி "டன்" (Done) என்றனர். இவர்களும் ஒரு பாரவூர்தி ஏற்பாடு செய்தனர். நல்ல உணவு (கிழக்கு பேர்லினில் அப்போது கடும் பஞ்சம். உணவு கிடைப்பது அரிது) உடைகள் (அவற்றிற்கும் அங்கு பஞ்சம்) மருந்து வகைகள் (அவற்றிற்கு இன்னும் அதிகமாக தட்டுப்பாடு) இன்னும் என்னென்ன அவசியமான பொருட்களோ அவற்றையெல்லாம் ஏற்றி கிழக்கு பேர்லின் எல்லையில் கொண்டு போய் இறக்கினர். அதன் கூடவே ஒரு பெரிய அறிவிப்புப் பலகையையும் வைத்துவிட்டு வந்தனர். அதில் அந்த அறிஞர் குறிப்பிட்டபடி, "யாரால் என்னென்ன தர முடியுமோ அவற்றை அவர்கள் தருகிறார்கள்!" என்று எழுதி வைத்திருந்தனர்!

இதைப் பார்த்த கிழக்கு பேர்லின்வாசிகளுக்கு எப்படி இருந்திருக்கும்!


('எழுச்சி பெறு யுவனே!' நூலில் கண்ணன் மகேஷ்)



## "இன்னா செய்தார்க்கு"

# பிறந்தவுடன் குழந்தையைப் பராமரிக்கும் முறைகள்!

– மருத்துவர் எஸ். கனகதுர்க்கா



பிறந்த் குழந்தை வீறிட்டு அழ வேண்டும். அப்படி அழுமேயானால் அதன் நுரையீரல் ஆரோக்கியமாக உள்ளது என அறியலாம். பிறந்தவுடன் குழந்தை அழவே இல்லை என்றாலும் உடனே நாம் செய்ய வேண்டியது இந்த வர்மப்புள்ளியை ஒரு நிமிடம் தொடர்ந்து அழுத்தம் கொடுத்துக்கொண்டே இருங்கள். குழந்தைகள் அழ ஆரம்பிக்கும். இப்புள்ளி குழந்தையின் கை கட்டை விரல் நக ஓரம் இருக்கும். இது நுரையீரலின் 11 ஆவது புள்ளியுடன் சம்பந்தப்பட்டது.

பிறந்த குழந்தைக்கு நாவில் தேனை வைப்பார்கள். இதை சேனை வைப்பது என்பார்கள். ஏன் இதற்கு சேனை என்று பெயர் வந்தது தெரியுமா?

கருவிலுள்ள குழந்தையே கதை கேட்டதாகச் சொல்லப்படும்போது வெளியே வந்த அந்தப் புது உயிருக்குத் தம்மைச் சுற்றிலும் எத்தனை உறவுகள் உள்ளது என அறியும்போதே அதன் மனதில் நம்பிக்கையும் உருவாகுமே. பின் ஆரோக்கியம் என்பது தொடரும் அல்லவா? அந்த நம்பிக்கையை வளர்ப்பதன் பெயர்தான் சேனை.

எவ்வளவுதான் நாகரிக காலத்தில் நாம் வாழ்ந்தாலும் குழந்தை பிறந்து 16ஆவது நாளிலிருந்து 48 நாள் வரையிலும் தினமும் ஏதாவது ஒரு மூலிகையை அரை டம்ளர் வெந்நீரில் வேகவைத்து அந்தத் தண்ணீரானது ஒரு சங்கு அளவு வற்றிவிட வேண்டும். (மூலிகை என்பது நம் வீட்டைச் சுற்றியே உள்ளது) இந்தப் பழக்கம் குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டவும், உடலில் கழிவுகள் தங்காமலும் பாதுகாக்கும்.

குழந்தையைக் குளிப்பாட்ட கோதுமை மாவை மட்டுமே பயன்படுத்த வேண்டும். பெண் குழந்தையாக இருந்தால் தரமான மஞ்சள் கிழங்கு, பச்சைப் பயறு, கஸ்தூரி மஞ்சள், மரிக்கொழுந்து, செண்பகப்பூ, ஆவாரம் பூ, காய், நாட்டு ரோஜா இதழ் இவற்றின் கலவை நல்லது.

தாய்ப்பால் ஒரு வருடமாவது கொடுப்பதால் குழந்தைக்கும் தாய்க்குமே நல்லது. தாய்ப்பால் அதிகமாகச் சுரக்க• தினமும் 10 கடலைப்பருப்பு, பால் கொழுக்கட்டை, கருப்பட்டி போன்றவற்றை உண்டு வந்தால் தாய்ப்பால் சுரக்கும். 6 மாதக் குழந்தைக்கு தோல் உளுந்து, பச்சைப்பயறு, பொரிகடலை, சிவப்பு நிற அவல் இவற்றை நன்கு வறுத்த பின்பு மாவாக்கி அந்த மாவைக் கருப்பட்டி சேர்த்து காய்ச்சிய கஞ்சியாக் அடிக்கடி கொடுக்கலாம். அளவு மிகவும் முக்கியம். கீரை வேக வைத்த தண்ணீர் (அரைக்கீரை), பருப்பு வேக வைத்த தண்ணீர், சீரகம், கறிவேப்பிலை, மல்லி ஆகியவற்றின் வேக வைத்த தண்ணீர் குழந்தைக்கு நல்லது. 1

வயது வரையிலும் எளிதில் ஜீரணமாகும் உணவைத் தேர்வு செய்யுங்கள்.

அதேபோல் குழந்தைக்கு உணவைத் திணிப்பதைத் தவிருங்கள். கிண்ணத்தில் உணவு மிச்சமாகக் கூடாது என எண்ணும் நீங்கள் உங்கள் குழந்தையின் வயிறு என்னவாகும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். அதை நீங்கள் அன்பு, பாசம் என்று நினைப்பீர்களேயானால் அது உங்களின் அறியாமையே ஆகும். வருங்கால நிரந்தர நோயாளியை உருவாக்கிக் கொண்டுள்ளீர்கள் என்பதையும் உணருங்கள். யாரைக் கேட்டாலும் குழந்தை சாப்பிடவே மாட்டன் என்கிறது என்பது பெற்றோர்களின் புலம்பல். அதன் வயிறுக்குத் தேவையானபோது அது உணவைத் தேடும்.

அதேபோலதான் படிப்பும். நீங்கள் கண்டிப்பாகப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதை விட்டுவிட்டு எப்படிப் படித்தால் அவர்களுக்குப் புரியும் என்ற வழியை மட்டுமே காண்பியுங்கள். கற்றுக் கொள்ளும் முயற்சியை குழந்தைகள் பார்த்துக் கொள்வார்கள். எல்லா விஷயத்திலேயும் உங்களின் தலையீடு அதிகமானால் குழந்தையின் முயற்சி தடையாகும். எல்லாம் அம்மா பார்த்துக் கொள்வாள் என்ற எண்ணம் உருவாகும்.

உணவை உண்ணவில்லை என்பதற்காக உணவுக்கிடையே அடிக்கிறீர்களே, அது மிகவும் மடைமையான செயல். இடையில் காய்கறி சூப், வாரம் ஒரு நாள் இஞ்சிச் சாறும் தேனும். 6 மாதத்திற்கு ஒருமுறை வயிற்றைச் சுத்தம் செய்வது தொடருமேயானால் வரும் காலம் நோயில்லாததாக மாறும்.

# 19ஆவது திருத்தத்தால் பிரதமருக்கு மாற்றியுள்ள அதிகாரங்கள் மகிந்த ராஜபக்ஷ பிரதமரானால் அவருக்கு நன்மையளிக்கும்

கலாநிதி தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து.

19ஆவது திருத்தத்துக்காக நடாத்தப்பட்ட போராட்டத்தில் வெற்றி பெற்ற நான்கு முக்கியமானவர்கள் உள்ளனர். அவர்களில் இரண்டாவது பெரிய வெற்றி வீரர் ஜனாதிபதி சிறிசேன ஆவார். அவரது அதிகார அடித்தளத்தில் போட்டியிடும் இரண்டு கூறுகளான அவரது நட்புக் கட்சியான ஐ.தே.க. மற்றும் அவரது சொந்தக் கட்சியான ஸ்ரீ.ல.சு.க ஆகிய இரண்டுக்கும் இடையே கைதேர்ந்த விதத்தில் சமநிலையை பேணி தனது அதிகாரத்தின் பெரும்பகுதியை அவரால் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது.

எனினும் முதலாவது மிகப் பெரிய வெற்றியாளர் ஜனாதிபதி சிறிசேன இல்லை. அது மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜூனியஸ் ரிச்சட் ஜெயவர்தனா அவர்கள். அவரது 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பு மிகவும் வலுவான கட்டமைப்பைக் கொண்டது என்றும் அவரது தூரத்து உறவுமுறை மருமகனான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பழைய போட்டியாளரான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மகளான சந்திரிகா குமாரதுங்க ஆகியோரின் நிறைவேற்று ஜனாதிபதித்துவத்தின் மையப் பகுதிக்கு முடிவுகட்டும் கூட்டு முயற்சியை வெற்றிகரமாக எதிர்த்து நின்றதும் நிரூபணமாகியுள்ளன.

அதிகாரத்தையும் வல்லமையையும் கடுமையான முறையில் ஜனாதிபதியிடம் இருந்து பிரதம மந்திரிக்கு மாற்றும் அநேக விதிகளுக்கு உச்ச நீதிமன்றம் ஆப்பு வைத்துவிட்டது. விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையை அறிமுகப் படுத்திய ஜேஆருக்கு நன்றி சொல்லும் விதமாக எண்ணிக்கையில் பெரிதாக இருந்த எதிர்க்கட்சி, அரசியலமைப்பு சபையின் திரைக்குப் பின்னால் முடிவெடுக்கும் பங்கான ஒரு தீர்க்கமான பாத்திரத்தில் மறைமுகமாக சிவில் சமூகத்தைப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த முடியாதபடி தடுத்துவிட்டது.

19ஆவது திருத்தத்தின் மூன்றாவது பெரிய வெற்றியாளர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. எதிர்க்கட்சியில் உள்ள அவரது விசுவாசிகளால் முன்னெடுக்க இயலுமாகவிருந்த ஒரு கசப்பான தற்காப்பு நடவடிக்கை மூலமாக ரணில் - சந்திரிகா திட்டத்துக்கு ஸ்ரீ.ல.சு.க யினை விற்பனை செய்வதை தடுத்ததோடு, அது ஏற்படுத்திய உந்துதல் ஜனாதிபதி சிறிசேனவை நேரடியாக தனது முக்கூட்டு அங்கத்தவர்களுடன் அணிசேருவதுக்கு மாறாக ஒரு சமநிலையான பாத்திரத்தை பின்பற்ற உதவியது அல்லது காரணமாக இருந்தது.



எதிர்க்கட்சியும் திட்டத்தை பாழடிக்கும் அழிவுகாரர்களைப் போல பார்க்கப்படும் தவறை செய்யாமல் தவிர்த்துக் கொண்டது. மாறாக அவர்கள் ஆக்கபூர்வமான விமர்சகர்களாகவும் மற்றும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடும் கடுமை பங்காளிகளாகவும் நடந்து கொண்டார்கள். பாராளுமன்ற விவாதங்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்பன ஒன்றிணைந்து 19ஆவது திருத்தத்தை பாழடிக்காமல் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்ததையே காண்பித்தன.

மிதமான அல்லது வரையறைக்கு உட்பட்ட என்று சொல்லப்படும் அதிகாரம் மற்றும் வல்லமையை பிரதம மந்திரிக்கு 19ஆவது திருத்தத்தின் மூலமாக மாற்றுவதன் விளைவாக மகிந்த ராஜபக்ஷவுக்கு மாத்திரமே அவர் பிரதமராக வரும்போது நன்மையடைய முடியும்.

"பிரதமரின் பங்குகள்" என்பதுக்கு 1977இல் இருந்து நடைபெற்ற எந்த தேர்தலையும் விட இப்போது பாரிய பிரதானத்துவம் கிடைத்துள்ளது என்று கருதலாம். இது மகிந்த ராஜபக்ஷவை தவிர வேறு யாருக்கும் நன்மை செய்ய முடியாது.

இறுதி வெற்றியாளர் பிரதமர் விக்கிரமசிங்க, அவரது அசல் திட்டம் அவர் சமர்ப்பித்த வரைவு மூலம் நுணுகிக் காணக்கூடியதாக இருந்தது, உச்ச நீதிமன்றத்தால் வெட்டப்பட்ட பிரிவுகளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக ஜனாதிபதி சிறிசேனவின் சம்மதத்துடன் அகற்றப்பட்ட பிரிவுகளும் இதற்குச் சாட்சி. நடைபெற்ற அதிகார மாற்றம் மிகவும் குறைவானது, ரணில் முயற்சி செய்ததைவிட அதிக அளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது மற்றும் அவர் தனது நவ தாராளவாத அரசியலமைப்பு அதிகாரப் பிடியினை பின்வாங்கும் நிலைக்குக் கட்டாயமாகத் தள்ளப்பட்டார்.

மிகப் பெரும் தோல்வியாளர்கள் சந்திரிகா குமாரதுங்க மற்றும் ரி.என்.ஏ. 19ஆவாது திருத்தத்தில் உள்ள மேல்தட்டு சிவில் சமூகத்தினரது பதிப்பின் பாதுகாவலர் சந்திரிகா குமாரதுங்கவே. 19ஆவது திருத்தம் சந்திரிகா குமாரதுங்கவின் அரசியலமைப்பு புரட்சியின் பிள்ளையாகும், அது நிறைவேற்று ஜனாதிபதித்துவத்தை தகர்ப்பதற்காக மீண்டும் பிறப்பெடுத்த ஒரு நவ தாரளவாத அதிர்வெடி. ஜே.ஆர் ஜெயவர்தனாவின் அரசியலமைப்பு சந்திரிகா குமாரதுங்கவை திரும்பத் திரும்ப முறியடித்துள்ளது. அவரது அரசியலமைப்பின் தலைமை வைசிராய் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்னவினால் சமர்ப்பிக் கப்பட்ட வரைவு இம்முறை உச்ச நீதிமன்றத்தால் மறுக்கப் பட்டுள்ளது.

அரசியலமைப்பு சபைக்குள் நுழைவதின் மூலம் அரசாங்கத்தை, கையாள முடியும் என்கிற நம்பிக்கையோடு இருந்த ரி.என்.ஏ மற்றும் சிவில் சமூக குடும்பங்கள், குறைந்தளவு வெற்றியுடன் சுருட்டிக் கட்டப்பட்டன. ரணில் மற்றும் சந்திரிகா குமாரதுங்க உருவாக்கிய "19ஆவது திருத்தம் பிளஸ்" "19ஆவது திருத்தம் மைனஸ்" ஆக குறைக்கப்பட்டுள்ளது.


19ஆவது திருத்தத்துக்காக மேற்கொள்ளப்பட்ட. போராட்டம் ஒரு உன்னத பாராளுமன்ற பேச்சுவார்த்தை ஆகும். அதன் விளைவு நிறைவேற்று அதிகாரத்தை கீறிக் கிழித்து அகற்றாமல் வெறுமே சிறிய குறைப்பை மட்டுமே செய்துள்ளது.

அது நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு மிகவும் அவசியமான ஒரு செப்பனிடல் ஆகும். ஆனால் அதன் அர்த்தம் முற்றாக மாற்றுவது அல்லது முற்றாக அகற்றுவது என்பதல்ல. இதை ஒரு இழுபறி விளையாட்டாக - அரசியல் சக்திகளின் உண்மையான சமநிலையை பிரதிபலிக்கும் ஒரு இக்கட்டான நிலையாக - அல்லது மிகவும் நம்பிக்கையுடன் மக்களின் இறையாண்மை மற்றும் தேசிய நலன்கள் என்பனவற்றின் ஒத்திசைவான விளைவால் வெற்றி பெற்ற மிதமான திருத்தமாகவும் ஒருவர் கருதலாம்.

# காகம் ஏன் கறுப்பாச்சு

ரொம்ப காலத்துக்கு முன்னாடி காக்கா வெள்ளையா இருந்திச்சாம். வெள்ளைன்னா அப்படி ஒரு வெள்ளை. அப்ப எல்லாம் காக்கா ரொம்ப தூரம் பறக்குமாம். சூரியன் வரைக்கும் பறந்து போகுமாம்.அப்படி இருந்த காக்கா எப்படி கறுப்பாச்சு? உங்களுக்கு சொல்றேன்..

சூரியபூர் நாட்டோட ராஜாவுக்கு ரொம்ப வருஷம் கழிச்சு அழகான இளவரசி பிறந்தாராம். கொள்ளை அழகு. குழந்தையில இருந்து வீட்டை விட்டே வெளிய வரேலையாம். நல்ல பெரியவங்களாகி கல்யாண வயசுல வெளிய விளையாட வந்தாராம். அவங்க பேரு அங்கிகா. அவங்க விளையாடறத பாத்த சூரியனுக்கு அவங்களை ரொம்ப பிடிச்சு போச்சுதாம். இளவரசிக்கும் சூரியனை பிடிச்சிடுச்சாம். தினமும் விடியற்காலையில் எழுந்ததில் இருந்து சூரியன் கிட்ட தான் பேசிட்டு இருப்பாங்களாம். சூரியனும் பூமிய சுத்திக்கிட்டே இளவரசிகிட்ட பேசிட்டு இருந்ததாம் ரொம்ப நல்ல நண்பர்களா மாறிட்டாங்க. ஒரு நாள் சூரியன் இந்த இளவரசிக்கு பரிசு கொடுக்க நினைச்சுதாம்.



சூரியன் கிட்ட வரைக்கும் காக்கா பறந்திட்டு இல்லையா? அதனால சூரியன் ஒரு காக்காவ கூப்பிட்டு பையில சந்தனம், வாசனை திரவியங்கள் முத்து மாலை எல்லாம் கொடுத்து இளவரசிகிட்ட கொடுத்துடுன்னு சொல்லிவிட்டு மறைந்து போச்சுதாம். சாய்ந்திரம் ஆகின சூரியன் தூங்க போயிடும் இல்லையா? காக்கா அந்த பையை தூக்கிக்கொண்டு இளவரசி இருந்த அரண்மனையை நோக்கி பறந்து போயிட்டு இருந்ததாம்.

வழியில் திருமண ஊர்வலம் போயிட்டு இருந்திருக்கு. நிறைய பழங்கள், உணவுப் பொருட்கள் எடுத்துட்டு போனாங்க போல. காக்காவுக்கு கொஞ்ச உணவாச்சும் கிடைக்குமேன்னு ஆசை. அரண்மனைக்கு போயிட்டு வந்தா தாமதமாகிப் போகும் என்று அந்த பைய ஒரு மரத்தில மாட்டிட்டு திருமண ஊர்வலத்துக்கு போச்சாம். மரத்துக்குக் கீழ இருந்த ஒருத்தன் இந்த காக்கா பைய வெச்சுட்டு போனதை பாத்துகிட்டே இருந்தானாம். நல்ல வாசனை வந்தது. அதனால மரத்தில ஏறி பைய திறந்து பாத்து இருக்கான். பைக்கு உள்ள சூரியன் கொடுத்து அனுப்பின எல்லா பொருளையும் பாத்து சொக்கி போயிட்டானாம். உடனே எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு மரத்தில இருந்த குப்பை எல்லாம் பையில எடுத்து போட்டுட்டு கிளம்பிட்டான்.

காக்கா நல்லா சாப்பிட்டு வந்துச்சாம். பைய எடுத்துக்கிட்டு இளவரசி அரண்மனைக்கு போயிட்டுதாம். அங்க இளவரசிகிட்ட சூரியன் கொடுத்த பைய கொடுத்துதாம். திறந்து பார்த்த இளவரசிக்கு அதிர்ச்சி. சீச்சீ இந்த சூரியன் ஏன் இப்படி பண்ணியது. என் மேல் அன்பே இல்ல. எல்லாம் நடிப்பு. அவன் பேச்சு இனிமேல் டூன்னு சொல்லிட்டு பைய விசிரியடிச்சிடுச்சாம்.

மறுநாள் காலை.சந்தோஷமா இளவரசிய பார்க்கலாம்ன்னு வந்த சூரியனுக்கு தூக்கிவாரி போட்டுச்சாம். அந்த பை கீழ விழுந்திருந்த பாத்தே ஏதோ தப்பு நடந்திருக்கிறது புரிஞ்சிடுச்சாம். பயங்கர கோபம் வந்துடுச்சாம். காக்காவை பார்த்து கோபமா பார்த்த உடனே வெள்ளையா இருந்த காக்கா கறுப்பா மாறிடுச்சாம். அதனால தான் சூரியன் கிட்டகூட பறக்க முடியாம போச்சாம். கிட்ட இருந்த சூரியனும் பூமி மேல கோபம் வந்து தூரமா போயிடுச்சாம்.

இப்ப தெரிஞ்சுதா காக்கா ஏன் கறுப்பாச்சுன்னு?

# உலகின் முதல் சூரியஆற்றல் (சோலார்) விமானம்

உலகின் முதல் சூரிய மின்ஆற்றல் (சோலார்) திட்டம் சோலார் இம்பல்ஸ் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. சுவிட் சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெர்ட்ரன்ட் பிக்கார்டு என்ற விமான வியல் நிபுணர் இதன் வடிவமைப்புக்குத் தலைமை வகித்துள்ளார். முதன்முறையாக பலூன் மூலம் உலகை வலம் வந்தவர்களில் பெர்ட் ரன்ட் பிக்கார்டும் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது.





உலகின் முதல் சூரிய ஆற்றல் விமானம் HB-S1A என்ற குறியீட்டுப் பெயரில் பதிவு செய்யப் பட்டது. நடைமுறையில் இந்த விமானமானது சோலார் இம்பல்ஸ் என அழைக்கப்படுகிறது. தொடர்ந்து 36 மணி நேரம் பயணம் செய்யும் ஆற்றல் பெற்ற இதில் இருவர் மட்டுமே அமர முடியும். 2010ஆம் ஆண்டு யூலை மாதம் 7 மற்றும் 8ஆம் திகதிகளில் தொடர்ந்து 26 மணிநேரம் பறந்து சாதனை படைத்தது. சூரிய வெளிச்சம் இல்லாத நிலையில், சேமிக்கப்பட்ட மின் ஆற்றலில் இரவில் தொடர்ந்து 9 மணி நேரம் பறந்து பெரும் வெற்றியாகக் கருதப்படு கிறது.இம்பல்ஸ்-1 விமானத்தை வடிவமைத்த அனுபவம் மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இம்பல்ஸ்-2 விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு இம்பல்ஸ்-2 விமானத்தை வடிவமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு 2014ஆம் ஆண்டு சோதனை முறையில் வெற்றிகரமாக இயக்கிப் பார்க்கப்பட்டது. தற்போது இம்பல்ஸ்-2 விமானம் தனது உலகச் சுற்றுப் பயணத்தைத் தொடங்கியுள்ளது.

மார்ச் 9 அன்று அபுதாபியின் அல் புத்தீன் நிர்வாக விமான நிலையத்தில் புறப்பட்டு 12 மணி நேரம் பயணம் செய்து ஓமன் நாட்டின் தலைநகர் மஸ்கட்டில் தரையிறங்கியது. பின்னர் மார்ச் 10 அன்று இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள அகமதாபாத் நகருக்கு வந்தது. பின்னர் வாரணாசி சென்றது. 16ஆம் தேதி மியான்மார் சென்ற விமானம், ஜூலை மாதத்திற்குள் அபுதாபி வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முழுவதும் கார்பன் /பைபர் தகடுகளால் வடிவமைக்கப்பட்டுள்ள இம்பல்ஸ்-2 விமானம் 2.3 டன் எடையினைக் கொண்டது. இதன் இறக்கை 236 அடி நீளம் உடையது. இறக்கைகள் மீது 17,000 சூரிய மின் ஆற்றல் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து பெறப்படும் மின்சாரம் லித்தியம் அயர்ன் மின்கலத்தில் (பேட்டரி) சேமிக்கப்படுகிறது.

ஆட்டோ பைலட் சிஷடம் இருப்பதால் நீண்ட தூரப் பயணங்களுக்கு ஏற்றது. நவீன விமானவியல் தொழில்நுட்ப வசதிகள் உள்ளன. 39,000 அடி உயரம் வரை இதில் பறக்க முடியும். தொடர்ந்து



120 மணி நேரம் வரை செல்லக்கூடியது. ஓடுதளத்தில் (ரன்வே) ஓடும்போது மணிக்கு 35 கி.மீற்றர் வேகத்திலும், பறக்கும்போது சராசரியாக 90 கி.மீற்றர் வேகத்திலும் பறக்கக்கூடியது.

இரவு நேரத்தில் மின் திறனைச் சேமிப்பதற்காக 60 கிலோ மீற்றர் வேகம் வரை செல்லக் கூடியது. இதன் அதிகபட்ச வேகத்திறன் மணிக்கு 140 கிலோமீற்றர் ஆகும். இருவர் மட்டுமே அமர வசதி செய்யப்பட்டுள்ள இந்த விமானத்தை உலகச் சுற்றுப் பயணத்தின் போது ஆந்த்ரே போர்ச்பெர்க் மற்றும் பெர்ட்ரண்ட் பிக்கார்டு ஆகியோர் இயக்குகின்றனர். ஐந்து மாதங்களில் 617 மணி நேர பய்ணத்தில் சுமார் 35,000 கி.மீ. தூரத்தைக் கடக்க இருக்கும் இந்த விமானமானது ஜூலை மாதத்தில் தனது சுற்றுப் பயணத்தை முடித்து விட்டு அபுதாபி வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சிறார்களே வர்ணம் தீட்டலாம் வாங்க





# மன்னார் எருக்கலம்பிட்டியில் வீடுகள் அமைக்க அடிக்கல் நாட்டல்

மன்னார் எருக்கலம் பிட்டி கிராமத்தில் 50 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை எருக்கலம்பிட்டி மக்கள் மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

இதன் போது குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட அமைச்சர் றிசாத் பதியுதீன் கிராமத்தின் முதற்கட்ட பணியாக 50 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து எருக்கலம் பிட்டி ம.வி பாடசாலையில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் வழங்கல், திவிநெகும வாழ்வாதார உதவிகள், மாதர் சங்க சுயதொழில் வாய்ப்பு, நெசவுத் தொழிலுக்கான உதவி,பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பை ஆகியவற்றையும் வழங்கி வைத்தார்.

குறித்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன்,முசலி பிரதேச சபையின் தலைவர் எம்.எகியான் மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எம்.சியான் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# புதிய வடமாகாண உறுப்பினருக்கு வீரபுரம் மக்கள் வரவேற்பு



புதிதாக பதவியேற்றுள்ள வடமாகாணசபை உறுப்பினர் எம்.பி.நடராஜ்க்கு வீரபுரம் கிராம மக்கள் வரவேற்புபசாரம் அளித்தனர்.

றொனால்ட் றீகனின் ஒழுங்கமைப்பில், வீரபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் ஜெயக்குமார் தலைமையில் கடந்த் சனிக்கிழமை இந்நிகழ்வு நடைபெற்றது இந்நிகழ்வில் வன்னி மாவட்ட எம்.பி சிவசக்தி ஆனந்தன், வடமாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராசா, செட்டிக்குளம் பிரதேசசபை உபத விசாளர் சந்திரமோகன்,உறுப்பினர் சிவகேதீசன் (கண்ணன்) மற்றும் யாழ் இராஜேஸ்வரன், கிராம பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். இதன்போது கிராம மக்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டன. (160)

# ஆங்கில செறிவூட்டல் பயிற்சி

யாழ். அமெரிக்க தகவல் கூடத்தினால் உயர் கல்வி கற்க விரும்பும் உயர்தரம் மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்காக வழங்கப்படும் ஆங்கில செறிவூட்டல் பயிற்சி நெறி எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த 4 மாத இலவச பயிற்சி நெறியினை தொடர வேண்டுமெனின், நாளை மறுதினம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ். பொது நூலகத்தில் இடம்பெறவுள்ள தேர்வுப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். முற்பதிவுகளை மேற்கொண்ட மாணவர்கள் மட்டுமே பரீட்சைக்கு அமர முடியும். அதனால், விரைந்து பதிவு செய்யுங்கள். பாடசாலையை விட்டு விலகியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பதிவுகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 021 222 0665 (செவ்வாய் புதன் மற்றும் வியாழக் கிழமைகள்) மற்றும் மின்னஞ்சல் american corner jaffna 2011@gmail.com (எல்லா நாட்களும்). நேரடியாக அமெரிக்க தகவல் கூடத்தில் முற்பதிவு செய்தல் விரும்பத்தக்கது. எமது முகவரி 23, அத்தியடி வீதி, நல்லூர்.

ஆங்கில செறிவூட்டல் பயிற்சி நெறியினை முழுமையாக பூர்த்தி செய்பவர்களுக்கு மாத்திரமே சான்றிதழ்கள் வழங்கப்ப்டும்.

# மஹோற்சவம்

(யாழ்ப்.

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான ட சகுண்ட யாக கௌமார மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆ[illegible]மாகி 13 தினங்கள் பெ[illegible]ாவாக இடம்பெறவுள்ளன.

இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் இடம் பெறுவதுடன் எதிர்வரும் 16ஆம் தி[illegible]கி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும், அன்று மாலைகொடியிறக்கமும் இடம்பெறவுள்ளதுடன் 19ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது.

தினமும் காலை 7 மணிக்கு அபிஷேகம் 8.30 மணிக்கு யாக பூஜை, ஸ்தம்ப பூஜையும் 10 மணிக்கு வசந்த மண்டபபூஜை, சுவாமி உலாவும் 11 மணிக்கு நற்சிந்தனை, பிரசாத விநியோகம் என்பன இடம் பெறும்.

மாலை 5 மணிக்கு சாயரட்சை பூசையும், 5.30 மணிக்கு யாகபூஜை, ஸ்தம்ப பூஜையும், 7 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், 8.30 மணிக்கு பிரசாதம் வழங்கலும் இடம் பெறும்.

ஆலய பிரதம குரு கலாநிதி சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் மஹோற்சவம் இடம்பெறவுள்ளது. (இ)

# யாழ். பல்கலை மருத்துவபீடத்தின் மருத்துவ வார நிகழ்வு

(திருநெல்வேலி)

யாழ்.பல்கலைக்கழக மருத்து பீடத்தின் 2015ஆம் ஆண்டு மருத்துவ வார நிகழ்வு நேற்று முன்தினம் இரவு மருத்துவ பீட கலையரங்கில் நடைபெற்ற மருத்துவ வார இரவு நிகழ்வுடன் நிறைவுபெற்றுள்ளது.

வருடாந்தம் நடைபெறும் இந்நிகழ்வின் போது மாணவர்கள் பீடத்தின் அக, புற சூழல்களை தூய்மைப்படுத்தி மெருகூட்டுவதுடன் மாணவர்களுக்கிடையே ஆன போட்டிகளையும் நடத்தி சிறந்த அணியை தெரிவு செய்வார்கள் இவ்வருட நிகழ்விற்கு பேராசிரியர் பரமேஸ்வரன் முதன்மைவிருந்தினராகவும், உபவேந்தர் வசந்தி அரசரத்தினம், மருத்துவ பீடதுறை பீடாதிபதி எஸ். பாலகுமார் ஆகியோர் ஏனையவிருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்வின்போது போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பேராசிரியர் பரமேஸ்வரன் சான்றிதழ்பதக்கம் வழங்கிக்கௌரவித்தார். நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் நிகழ்வில் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், வைத்திய நிபுணர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (54)

# பதிவிறக்கப் பெட்டகம்

முன்னெல்லாம் எழுத்து என்பது மனிதன் கஷ்டப்படும் போது அவனுக்கு ஆறுதல்சொல்கிற மாதிரியும், அவன் மனசை விசாலப்படுத்துகிற மாதிரியும், வழிகாட்டுவதாயும், சக மனிதனை நேசிக்கச் செய்வதாயும், இருக்கும் நிலையிலிருந்து மேன்மையைச் செய்வதாயும்தான் இருக்க வேண்டும் என்று நான் தீவிரமாக நினைத்தேன். ஆனால் கொஞ்ச நாளாக இந்த எண்ணத்தில் ஒரு மாறுதல் தோன்றியிருக்கிறது.

மனிதர்களிலே பலதரத்தினர் இருக்கிறார்கள். பல ருசியுடையவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவைகளும் பல தரப்பட்டதாய் இருக்கிறது. இப்படி இருக்கிறபோது எந்நேரமும் "சீரியஸா' இருக்க முடியுமா? சில சமயங்களிலே நமக்கும் Relaxation தேவைப்படுது. அம்மாதிரி தேவை க்ளை இட்டு நிரப்புவதற்காக light reading இருக்கலாமே என்று இப்ப நான் நினைக்கிறேன்.

ஆனால் இதிலே வருத்தத்துக்குரிய விஷயம் என்னவென்றால், இப்ப எல்லா எழுத்துமே இலேசா, குறிக்கோள் இல்லாமல், 'directionless' ஆக இருக்கு என்பதுதான். இப்படி எழுதுவதுதான் இலக்கியம் அப்படி எழுதுவதிலேயே சில சிகரங்களைத் தொட்டுவிட்டதாகச் சிலர் மனப்பிரமை கொள்வதும், அவர்களுக்குப் பட்டங்களை வாரி வழங்குவதும் இதெல்லாம் துரதிர்ஷ்டமான போக்கு. நல்ல தரமான எழுத்துக்களும் இருந்து, நடுவில் இந்த மாதிரி எழுத்துக்களும் இருந்தால் தேவைப்படுகிறவர்கள் அதைப் பழச்சுட்டுப் போகட்டும். **– திலகவதி ஐ.பி.எஸ்.**

படைப்புச் செயல் ஒரு தந்திரம் அல்லது விளையாட்டு என்று கூடத் தோன்றுகிறது. தன்னைத் திரும்பத் திரும்பக் கண்டு பிடித்துக் கொள்ளும் விளையாட்டு. தன்னுடைய இருப்பைத் தனக்கே மறைத்துவிடும் தந்திரம். சொற்கள் சமுத்திரத்தின நீரைப் போல சூழ்ந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய கயமைகள், இடையறாது பெருகும் கசப்புகள், துரத்தப்படும், கைவிடப்படும் புராதன பயங்கள், காதல்களின் உதிரப் பெருக்குகள். நான் குழந்தையாக இருந்தபோது கண்ட பரிசுத்தமான கனவுகள் என எத்தனையோ தீவுக்கூட்டங்கள் அச்சமுத்திரத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன. சொற்களின் சமுத்திரம் அத்தீவுகளின் கரைகளைத் தொடர்ந்து நனைத்தவண்ணம் இருக்கிறது. **– மனுஷ்யபுத்திரன்**

நான் சிறுகதை ஆசிரியனும் இல்லை. சிறுகதை வாத்தியாரும் இல்லை. [சிறுகதை எழுது என்று யாராவது என்னைக் கேட்டால் எனக்கு வயிற்றில் புளியைக் கரைக்கத் தொடங்கிவிடும்.!] நான் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட கதைகளில் ஒன்றோ இரண்டோதான் சிறுகதை என்ற சொல்லுக்குச் சற்று அருகில் நிற்கின்றன. மற்றவைகளைச் சிறுகதை என்றால் சிறுகதை என்ற சொல்லுக்கே இழிவு செய்கிற மாதிரி. இப்படியானால் ஏன் இத்தனை நாழி கதைத்தாய் என்று கேட்காதீர்கள். தோல்வி பெற்றவர்கள்தான் உங்களுக்கு வழி சொல்லமுடியும். **– தி.ஜானகிராமன்**

'சிலிர்ப்பு' சிறுகதையை தமிழின் சிறுகதை உலகின் ஒப்பற்ற சாதனை என்றே சொல்லத் தோன்றுகிறது. ஒருபக்கம் வாழ்வின் அடர்த்தியான துக்கமும் தவிப்பும் இன்னொரு பக்கம் கனிவின் ஆதரவும் அணைப்பும். அடையாளம் தெரியாத, எந்த உறவுமில்லாத, தற்செயலாக சந்திக்க நேர்கிற ஓர் உயிரின் மீது இன்னொரு உயிரிடம் ஊற்றெனச் சுரக்கும் கனிவுதான் இந்த வாழ்க்கைக்கும் மண்ணுக்கும் பொருள் சேர்க்கக் கூடியது. ஒரு குழந்தையிடம் இருந்து தொடங்கும் கனிவு நாளை உலக மாந்தர் ஒவ்வொருவரிடமிருந்தும் ஊற்றுக்கண்களாகக் கண்டடையப்படலாம். ஆழ்நிலத்தில் படர்ந்திருக்கும் நீர்ப்பரப்பை மண்ணின் எப்பகுதியில் வேண்டுமானாலும் துளையிட்டுத் தீண்டிவிட இயல்வதைப்போல, இது சாத்தியப்படக் கூடிய பெருங்கனவே என்கிற எண்ணம் தி.ஜானகிராமனிடம் இருந்திருக்கக் கூடும். **– பாவண்ணன்**

இடைவிடாத தேடுதல் கொண்டவரே நல்ல வாசகர். எந்தப் படைப்பாளியிடமும் அவர் தேங்கிவிடக் கூடாது. மாலை போட்டு சூடம் காட்டக் கூடாது. தலைவராக, ஒரே படைப்பாளியை பாலபிஷேகம் செய்யக் கூடாது. ஓடிக்கொண்டே இருக்கிற நதி போல ஒரு நல்ல வாசகர் இருப்பார். நல்ல வாசகர்களே, நல்ல எழுத்தாளரையும் உருவாக்க முடியும். வாசகர், 'சக இருதயர்' என்பது. ஓர் அழகிய உண்மை. எழுதுபவரையும்விட ஒரு நல்ல, ஆரோக்கியமான வாசகரே இலக்கியத்தை வளர்ப்பவர்! **– பிரபஞ்சன்**

# நாட்டின் பெரிய கள்வர்கள் ஐக்கிய தேசிய கட்சியிலேயே உள்ளனர்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலேயே நாட்டின் பெரிய கள்வர்கள் இருக்கின்றார்கள் என முன்னாள அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை கள்வர் என சிலர் குற்றம் சுமத்தி வருகின்றனர். எனினும் நாட்டின் பெரிய கள்வர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கின்றார்கள்.

அவர்கள் பற்றிய விபரங்கள் வெகு விரைவில் வெளியிடப்படும்.

நான் சிறந்த சுதந்திரக் கட்சி உறுப்பினர். 33 ஆண்டுகளுக்கு முன்னதாக சிறிமா பண்டார நாயக்கவிடம் கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டேன். எந்த சந்தர்ப்பத்திலும் கட்சியை விட்டு விலகிச் சென்றதில்லை.

சந்திரிக்கா, அனுர பண்டார நாயக்க, மைத்திரி கட்சியை விட்டுச் சென்ற போதிலும் நாம் செல்லவில்லை. எனவே கட்சியைப் பற்றி பேசும் உரிமை எமக்கு உண்டு. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இன்று மகிந்த ராஜபக்ஷவையே ஆதரிக்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை என அண்மையில் களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார்.

# 3 தான சாலைகளுக்கு தடை விதிப்பு



(கொழும்பு)

வெசாக் பேயாவை முன்னிட்டு பத்தேகம பிரதேச சபைக்குட்பட்ட மூன்று இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தான சாலைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பத்தேகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் அதிகாரிகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சோதனைகளை அடுத்து இவை தடை செய்யப்பட்டுள்ளன.

# அனைத்து கட்சிகளின் ஆதரவையும் பெற்று சுதந்திரக் கட்சி ஆட்சி அமைக்கும்

## சுசில் பிரேம ஜயந்த



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பலத்துடன் அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவையும் பெற்றுக் கொண்டு மீண்டும் சுதந்திரக் கட்சி ஆட்சி அமைக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆதரவுடன் இதனை மேற்கொள்ளப்போவதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு ஹைபார்க் மைதானத்தில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதியின் செய்தியை வாசித்தபின் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# மக்களின் பாராட்டே சிறந்த சான்றிதழ்

## — ஜனாதிபதி —



(கொழும்பு)

அரசியல் வாதிகளுக்கும் அரச ஊழியர்களுக்கும் கிடைக்கக் கூடிய அதியுயர் சான்றிதழ் மக்களின் பாராட்டு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எப்படியான அர்ப்பணிப்புகளை மேற்கொண்டாலும் மக்களின் பாராட்டை வென்றெடுக்க முடியாவிட்டால் அதில் பலனில்லை எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார். அம்பாறை வைத்திய சாலைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஜனாதிபதி, வைத்தியசாலை ஊழியர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் நலன்களை விசாரித்து அறிந்து கொண்ட ஜனாதிபதி அவர்களுக்கு பழங்களை வழங்கியதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# ஈரானிய பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(கொழும்பு)

காலி வெலிகமை பிரதேசத்தில் கிராகல தீவுப்பகுதியில் புகைப்படமெடுக்கச் சென்ற ஈரானிய பிரஜை ஒருவர் கடலில் மூழ்கி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இடத்துக்கு புகைப்படங்களை எடுப்பதற்காகச் சென்ற இவ்விருவரும் கடற்கரையோரமாக இருந்த கல் சரிந்து விழுந்ததையடுத்து தவறி கடலில் விழுந்துள்ளனர். இதனைத்தொடர்ந்து கடற்படையினரின் உதவியுடன் இருவரும் மீட்கப்பட்டபோது. அதில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றையவர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் 24 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# 3 பெண்கள் உட்பட எண்மர் கைது

(கொழும்பு)

வெசாக் தினத்தன்று சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூன்று பெண்கள் உட்பட எண்மர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹம்பலாங்கொடை கிரேவத்தையில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# சம்பள உயர்வு யோசனை பெரும் துரோகச் செயல்

## என்கிறார் தொழிற்சங்க தலைவர்

தனியார்துறை ஊழியர்களுக்கான சம்பள உயர்வு யோசனை ஓர் துரோகச் செயலாகும் என தொழிற்சங்கத் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்களை 5000 ரூபாவினால் அதிகரிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது. 2500 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக முன்னதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. எனினும் தற்போது அந்தத் தொகை 1500 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

ஒரே தடவையில் 2500 ரூபா சம்பளத்தை வழங்காது, மே மாதம் 1500 ரூபாவும் அடுத்த ஜனவரி மாதம் முதல் மேலும் 1000 ரூபா சம்பள அதிகரிப்பும் வழங்கப்பட உள்ளது.தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்கள் குறைக்கப்பட்டமையின் பின்னணியில் நல்லாட்சி அரசாங்கத்தின் சில அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஏனெனில் குறித்த அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சில நிறுவனங்களை நடாத்தி வருகின்றனர். இதனால் தான் சம்பள உயர்வை அதிகளவில் வழங்குவதற்கு அவர்கள் விரும்பவில்லை. வாக்குறுதி அளிக்கப்பட்டதன் அடிப்படையில் சம்பள உயர்வு 2500 ரூபாவினால் உயர்த்தப்பட வேண்டுமென வசந்த சமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# மினி சூறாவளியால் 30 வீடுகள் சேதம்

(கொழும்பு)

பொலன்னறுவை, மெதிரிகிரிய மற்றும் கல்லேல்ல உள்ளிட்ட பல பிரதேசங்களை ஊடறுத்து வீசிய மினி சூறாவளியினால் 30 வீடுகளின் கூரைகள் அள்ளுண்டன.

மெதிரிகிரிய தலாகொல, வெவ, வடிகவெவ ஆகிய பிரதேசங்களில் 15 வீடுகளும் கல்லேல்ல மற்றும் மஜின்புர ஆகிய பிரதேசங்களில் 15 வீடுகளுமே சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை வீசிய இந்த மினி சூறாவளியுடன் ஐஸ் கட்டிகளும் விழுந்ததாக பிரதேசவாசிகள் திெவித்தனர்.








கொழும்பு கம்பன் விழா - 2015 கோலாகலமாக ஆரம்பமானது. இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் நேற்று முன்தினம் மாலை அமர்வில் கலந்து கொண்டார். இவர் அரங்கத்தின் நடுவில் சிம்மாசனம் கொடுக்கப்பட்டு அமர்த்தப்பட்டார். தசரத சக்கரவர்த்தியாக உருக் கொடுக்கப்பட்டார்.

37. இவ்வுருக்கோலமானது



(1). மிதுனம்
(2). கலப்பை
(3). இடபம்
(4). ஓராயன்

38. உருவில் உள்ளவர் ஆற்றிய சேவை



(1). தேசியகீதத்தை வடிவமைத்தமை
(2). இலவசக்கல்விக்கு வித்திட்டமை
(3). தேசிய சுதந்திரத்துக்காக பாடுபட்டமை
(4). கலைத்துவ படைப்புக்களை நிர்மாணித்தமை

39. இலங்கைக்குரிய பிராணி பின்வருவனவற்றுள் எது?
(1). முதலை　(2). வரிப்புலி　(3). வரிக்குதிரை　(4). கொம்பு ஓணான்

40. மனித உடலில் எலும்புகளுக்கு உறுதியை வழங்கும் போசணைச்சத்து
(1). இரும்பு　(2). விற்றமின் C　(3). கல்சியம்　(4). அயடீன்

41. எந்த நதியானது கடலுடன் கலக்கும் இடத்திற்கு அருகாமையில் இரு கிளைகளாக பிரிந்து செல்கிறது
(1). களனிகங்கை　(2). நில்வளகங்கை　(3). வளவகங்கை　(4). மகாவலிகங்கை

42. கசப்புச் சுவையுடைய பாலை நீக்கிய பின் உணவுக்கு பயன்படும் காய்?
(1). மஞ்சள்பூசணி　(2). மாம்பிஞ்சு　(3). ஈரப்பலா　(4). வெள்ளரிப்பிஞ்சு

44. தாதுசேன மன்னனால் கட்டப்பட்ட கால்வாய் எது?
(1). ஐயகங்கை கால்வாய் (2). எலகர கால்வாய் (3). கந்தளாய் கால்வாய்　(4). மினிப்பே கால்வாய்

45. இலங்கையின் அரச இலட்சனையில் சூரிய, சந்திரன் மூலம் கருதப்படுவது
(1). இலங்கையின் சௌபாக்கியம்
(2). இலங்கையின் தன்னிறைவு
(3). இலங்கையின் தார்மீக வாழ்வு
(4). உலகத்தின் நிலைப்பாடு

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 01. முதிரை, தேக்கு, கருங்காளி　02. தமிழ் சிங்களம், ஆங்கிலம்　03. பச்சையம் அல்லது குளோரபில்
04. கடிக்கும், உதைக்கும், விராண்டும், கொத்தும், முட்டும்
05. உளர்த்துதல், குளிருட்டுதல், தகரத்தில் அடைத்தல், இரசாயனப்பொருள் சேர்த்தல்　(02). 06. பால் பெறல்
07. வண்டி இழுத்தல்　08. பாலைவனப்பயணம்　09. விளையாடுதல்　10. நேரம் பார்த்தல்
11. துணி, காகிதம் வெட்டுதல்　12. படித்தல்　13. விறகுவெட்டுதல், மரம் வெட்டுதல்
(03). 14.2　15.1　16.1　17.3　18.3　19.1　20.1
21.4　22.1　23.2　24.4　25.2　26.2　27.4
28.4　(04). 29. தோட்டம் ஒன்றை ஆசிரியரும் மாணவர்களும் பார்வையிடுகின்றனர்
30. பூடத்தில் குறிக்கவும்　31. கோவா　32. செலவைக் குறைத்தல், புதிய காய்கறிகளைப் பெற்றுக்கொள்ளல்
33. பீர்க்கு, பாகல், புடோல், பூசனி　(05). 34. சரி　35. சரி　36. பிழை　37. சரி　38. பிழை
(06). 39. மிதக்கின்றது　40. கடைட்　41. மேடைகளில்　42. புதிய　43. கப்பல்கள்　(07). 44.5
45.1　46.2　47.3　48.4　(08). 49. வாழைப்பழத்தோல், உடைந்த போத்தல்,
பாதையிலுள்ள குழிகள்　50. அட்டெடு, மாட்டெடு, கோழிச்சம், கூட்டெடு 51. நீர் நிலைகளில் குப்பை கூழங்களை அமைத்தல் கூடாது　52. வீதியின் வலது புறமாகச் செல்லுதல், மஞ்சள்கோட்டில் பாதையைக் கடத்தல்
(09). 53. எருமை　54. குருடு　55. ஹெலிகொப்டர்　56. நாய்　57. தையல் இயந்திரம்
58. யானை　59. தண்ணீர்தொட்டி　60. புலி　(10). 61.1
62.4　63.2　64.1

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

தந்தை இறந்தார் என்ற செய்தியை கேட்டதும் இராமன் அடியற்ற மரம் போல விழுந்தான். சிறிது நேரத்தின் பின் மயக்கம் நீங்கி எழுந்தான். சகோதரர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் கூறிக்கொண்டனர்.

01. தகப்பன் என்ற சொல்லுக்கான ஒத்தகருத்துச் சொல்லை தருக ..............................
02. தெளிவு என்ற சொல்லின் எதிர்ச்சொல்லை தருக? ..............................
03. பந்தியில் இடம்பெற்றுள்ள உவமானத்தை குறிப்பிடுக? ..............................
04. மயக்கமுற்று விழுந்தவன் யார்? ..............................
05. படர்க்கை, பன்மை, இறந்தகால, வினைச்சொல்லை தருக? ..............................
06. படர்க்கை, பன்மை, பெயர்ச்சொல் ஒன்றை தருக? ..............................

**(02) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக**

07. அரசனது செயல் எவ்வளவு ..............................(உன்னதமானது, உன்னதமானது)
08. புறா சிபிச்சக்கரவர்த்தியின் மடியில் ..............................(பதரி, பதறி) விழுந்தது
09. ஒரு நல்ல ..............................(வலி, வழி) இருக்கின்றது

**(03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக**

10. வந்தார் எனும் சொல்லானது படர்க்கை, பன்மை, வினைமுற்றாகும்　(　)
11. இலங்கையர் எனும் சொல்லானது படர்க்கை, பன்மை, வினைமுற்றாகும்　(　)

**(04) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக**

12. may i come in? ..............................
13. I will come tomorrow ..............................

**(05) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக**

14. தயவு செய்து கரும்பலகையை துப்பரவு செய்யவும் ..............................

**(06) ஆங்கிலச்சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவற்றை வெற்றிடத்தில் எழுதுக**

15. elep.........ant　16. Um.........rella　17. pin.......appl.....

**(07) சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக**

18. எனது ஊர் கண்டி ..............................

**(08) கருத்தினை தமிழில் எழுதுக**

19. குருத்துமா பந்திய(ட்)ட ஆவாத? ..............................

**(09) இடைவெளியை நிரப்புக**

20. தமிழ் மொழியில் ..............................மெய் எழுத்துக்கள் உள்ளன (12, 18, 30)
21. கிராமிய பாடல்கள் அல்லது ..............................பாடல்கள் மிகவும் எளிமையானவை (கும்மி, நாட்டார், கூத்து)

**(10) பின்வரும் கவிதையை பூர்த்தி செய்க**

22. ராம......ராம......ரவிகுல சோமா..........
.................... .... கல்யாண ராமா

23. ஓவியம் தருவாய் சிற்பம்
உணர்விப்பாய் கவிதையூட்டக்
காவியம் தருவாய் மக்கள்
கலகலவெனச் சிரிப்பு மேவிடும்
..............................

**(11) பின்வரும் சொற்களின் சரியான சொல்லை எழுதுக**

24. போயிலை .................... 25. நியமூறாய் .................... 26. அவிட்டுக்கட்டு ....................

**(12) வெற்றிடம் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க**

27. என் வாழ்நாளைக் கழித்து ..............................(வருகிறோம், வருகின்றேன்)

28. தினசரி வெளிவரும் தமிழ் ..............................பல உள (பத்திரிகை, பத்திரிகைகள்)

29. பத்திரிகை எத்தனையோ ..............................த் தனியான இடத்தினை வகித்து வருகின்றது (ஆண்டாக, ஆண்டுகளாக)

**(13) இடைவெளி நிரப்புக**

30. சிறுவன் ..............................கண்டு மகிழ்ந்தான் (அம்புலி, அம்புளி)

31. ..............................க் கேணியில் நாங்கள் பந்தாடினோம் (கிரிமலை, கிரிமலை)

32. நூல் நூற்று ஆடை தயாரிப்பவர் ..............................ஆவார் (நெசவாளி, நெசவாலி)

**(14) உடற்பயிற்சி விளையாட்டுக்கு அடிப்படையாகும் அந்த வகையில் விளையாட்டின் மூலம் நாம் அடையும் நன்மைகள் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருப்பதுடன் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக அமைய வேண்டும்**


33. ..............................

34. ..............................

35. ..............................

**(15) கணித வினாக்களுக்கு விடை தருக**

36. பின்னத்தை கூட்டுக $\frac{1}{4} + \frac{2}{8} = \square$




37.1. எண் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எண்ணை எழுதுக? ....................

2. ஆயிரங்களின் பெறுமதியையும், பத்துக்களின் பெறுமதியையும் தனித்தனியாக எழுதுக?
i. .................... ii. ....................

38.

| | | | |
|---|---|---|---|
| 32 | 40 | 16 | 56 |
| | 54 | | 72 |
| 24 | 18 | 36 | |


அருகில் உள்ள எண்களைப் பயன்படுத்தி 8இன் மடங்குகளை அட்டவணையில் ஒழுங்குபடுத்தி எழுதுக

| 8இன் மடங்கு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

39. மு.ப 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட செயலமர்வு 2 மணித்தியாலம் 30 நிமிடங்கள் கழித்து முடிவுற்ற நேரத்தை இலக்கக் கடிகார நேரமாகத் தருக? ....................

40. ரூ.1000 கொடுத்து ரூபா 825 இற்கு பால்மா பைக்கற்று ஒன்றை விலைக்கு வாங்கிய பின் எஞ்சும் பணம் எவ்வளவு?
..............................







41.1. இவ்வுருவிலுள்ள திண்மத்தின் பெயர் யாது? ..............................

2. இதில் காணப்படும் நிலைக்குத்து விளிம்புகள் எத்தனை? ..............................

42. ஒரு சுவருக்கு நிறம் பூசுவதற்கு 4l 500ml தீந்தை தேவைப்படுகின்றது. ஒரு லீற்றர் தீந்தை ரூபா 800 எனின், தீந்தைக்கான செலவைக் காண்க?
..............................


43. உருவின் பரப்பளவை சென்ரிமீற்றரில் தருக? ..............................




44. 
உருவிலுள்ள கோணங்கள் செங்கோணத்திலும் குறைந்த கோணங்கள் எத்தனை உள்ளன? ....................

45. 2012ஆம் வருடம் ஜனவரிமாதம் 1ம் திகதி திங்கட்கிழமை எனின் 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி என்ன நாளாகும்?
..............................

46. உருவில் 1cm நீளத்தில் ஆணி அறையப்பட்டுள்ளன. அதில் நீளம் 4cm அகலம் 3cm கொண்ட செவ்வகத்தை வரைக?



47. பின்வரும் உரோமன் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக
XI, XVI, XIV, XIX, XV ...... ...... ...... ...... ......

48. 432 இளநீர் காய்களை 4 சம குவியல்களாக இடும்போது ஒரு குவியலில் இடப்படும் இளநீர் காய்கள் எத்தனை?
..............................

**(16) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக**

49. நீரை சுத்திகரிக்க பொருத்தமானது பின்வருவனவற்றுள் எது?
(1). கரிக்கட்டி (2). செங்கற்துண்டு (3). திரள்பஞ்சு (4). புழுதிமண்

50. நீரில் பூக்கும் பூ ஒன்று
(1). லில்லி (2). பூவரசு (3). ஆவாரம்பூ (4). ஆம்பல்

51. பின்வரும் இலைகளில் பெரிய இலை எது?
(1). செவ்வரத்தை (2). புகையிலை (3). மா இலை (4). கோப்பி இலை

52. பின்வரும் எப்பிராணியினது செயற்பாட்டினால் தாவரத்தின் வளர்ச்சி பாதிப்படையும்?
(1). ஆமை (2). ஆந்தை (3). செவ்வெறும்பு (4). பச்சோந்தி

53. அரை அவியலாக உண்ண ஏற்ற உணவுக்கூட்டம்
(1). பழங்கள், மாமிசம் (2). காய்கறி, கீரைவகை (3). கீரைவகை, அரிசி (4). அரிசி, காய்கறி

54. இலங்கையின் அதிவேக நீளமான பாலம் எது?
(1). கொழும்பு கொட்டாவை (2). களனி பாலம்
(3). கின்னியா பாலம் (4). மன்னம்பிட்டிய பாலம்

55. குழு விளையாட்டு அல்லாதது
(1). தட்டெறிதல் (2). எல்லே அடித்தல் (3). ஹொக்கி (4). பேஸ்போல்

56. மட்பாண்டங்களை தயாரிக்க உதவுவது
(1). புகைதுருக்கி (2). குல்லம் (3). வனைசில்லு (4). பற்சில்லு

57. கௌப்பி, பயறு, கடலை போன்ற வித்துக்களை தாக்கும் பூச்சியினம் எது?
(1). வெண்முட்டுப்பூச்சி (2). மீலிமுட்டைப்பூச்சி (3). நீள்மூஞ்சிவண்டு (4). அவுக்கலபோரா

# கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது



கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வந்த ஹலோ ட்ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனப் பணியாளர்களின் பணிப் பகிஷ்கரிப்பு நேற்று கைவிடப்பட்டுள்ளது.

முன்னறிவித்தல் இன்றி 450 கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் பணியிலிருந்து நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டு வந்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணி வெடி அகற்றும் மிக முக்கியமான மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வந்த பணியாளர்கள் 200 பணியாளர்களை தவிர ஏனைய 450 பணியாளர்கள் நிதியின்மையால் வேலையில் இருந்து நிறுதத்தப்படப் போவதாக ஹலோ ட்ரஸ்ட நிறுவனம் அறிவித்துள்ளது அதேவேளை தொடர்ச்சியாக சுமார் 200 வரையான பணியாளர்களை பணியில் வைத்திருக்கப் போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து பணியாளர்களும் எதிர்புத்தெரிவித்து பகிஸ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இருக்கின்ற நிதியை கொண்டு அனைத்து பணியாளர்களுக்கும் சம காலத்தில் பணியை வழங்குங்கள், ஐந்து வருடங்களை இன்னும் ஒரு சில மாதங்களில் நிறைவு செய்ய இருக்கின்ற பணியாளர்களை பணியிலிருந்து நிறுத்துவதனை நிறுத்துங்கள், பணியாற்றும் ஒப்பந்தம் நிறைவடையும் முன் ஏன் பணி நிறுத்தம், இதுவரை காலமும் உயிர் ஆபத்துமிக்க பணியில் ஈடுப்பட்டு வந்த தங்களை திடீரென தெருவில் விடடு விடாதீர்கள் என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் பணி பகிஸ்கரிபில் ஈடுப்பட்டவர்களுடனும் ஹலோ ட்ரஸ்ட கண்ணிவெடி அகற்றும் நிறுவன அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளதோடு தான் உரிய தரப்புகளின் கவனத்திற்குக் கொண்டு சென்று தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதாக குறிப்பிட்டார். இதனையடுத்து பணி பகிஸ் கரிப்பில் ஈடுபட்டவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை தங்களது போராட்டத்தை கைவிட்டுள்ளனர். (29)

## தினமுரசுக்கு வந்த கடிதம்

தினமுரசு

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களை வேலையேதுமின்றி சும்மா இருந்து சம்பளம் பெறுமாறு அறிவுரையும் ஆலோசனையும் யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மூடப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சினுடைய நாடு முழுவதுமான அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நிலையை கருத்திற்கொண்டு அவர்களை தற்காலிகமாக இணைத்துக் கொண்டுள்ள வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு அவர்களை வெற்றிடங்கள் காணப்படும் ஏனைய அமைச்சுக்களுக்கும் இணைத்துக்கொள்ள அனுமதியளித்து கடந்தமாதம் கடிதமொன்றை (பிரதி இணைக்கப்பட்டுள்ளது) மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பி வைத்திருந்தது.

இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் காணப்படும் ஐநூறுக்கும் மேற்பட்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் பலர் தமக்கான புதிய அமைச்சுக்களை தேட இணையும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

அவ்வாறு முயற்சித்த சிலர் தமது அமைச்சு மாற்றத்திற்காக தத்தம் பிரதேச செயலர்கள் ஊடாகவும், குறித்த அமைச்சின் ஊடாகவும் முயற்சிகளை மேற்கொண்டபோதும் இதுவரை பலருக்கு பயன்கிட்ட்வில்லை.

தாங்கள் எதிர்பார்த்த மாற்றம் இடம்பெறாத காரணத்தை அறிய முற்படும் நோக்கோடு மாவட்ட திட்டமிடல பணிப்பாளரைச் சந்திக்கச் சென்றவர்களிடம் மேற் கண்டவாறு கூறியிருக்கிறார். மாவட்டத்தினுடைய உச்ச பொறுப்பிலிருக்கும் ஒருவர் இப்படி பொறுப்பற்ற விதத்தில் கதைப்பது சரியா?

மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் பெறுபவர் என்ற சிந்தனை கொஞ்சமும் இல்லை. தன்னுடைய மனநிலையில் மற்றவர்களும் இருக்கவேண்டும் என்று நினைப்பவரை மக்களுக்கு அடையாளம் காட்டவேண்டியது உங்களது பொறுப்பு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

– சமூக நலன்விரும்பிகள்

# பரந்தனில் பாலம் அமைப்பு

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் மூன்று மில்லியன் ரூபா செலவில் புதிய பாலமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்தார்.

பரந்தன் முதலாம் ஒழுங்கைக் கிராமமக்கள் இரணைமடுக்குளம் வான்வெள்ளம் பாய்கின்றபோது போக்குவரத்து செய்வதில் இடர்களை எதிர்கொண்டுவந்த நிலையில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்படி பகுதியில் பாலமொன்றினை அமைத்துள்ளதெனவும் தெரிவித்தார். (160)

# முல்லைத்தீவு மாவட்டத்திலும் வெசாக் பண்டிகை நிகழ்வுகள்





முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாண்டும் இராணுவத்தினரால் வெசாக் பண்டிகை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

முல்லைத்தீவு பிரதேச சபை மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு பாதுகாப்புப்படைகளின் சேனைத்தளபதி மேஜர் ஜெனரல் என்.ஏ.ஜெகத் டயஸ் மற்றும் 59 ஆவது படையணியின் சேனைத் தளபதி பிரிகேடியர் முதலிகே ஆகியோர் கலந்துகொண்டு குறித்த வெசாக் கண்காட்சிகளை வைபவரீதியாக திறந்து வைத்தனர்.

இதன்போது முல்லைத்தீவு படையணிகளிற்கு இடையிலான புத்தபெருமானின் பிறப்பு மற்றும் ஞானம் அடைந்ததை குறிக்கும் நிகழ்வுகளை விளக்கும் செயற்பாடுகள் போட்டியாக நடைபெறுகின்றது. இந்தக் கண்காட்சியில் முல்லைத்தீவில் உள்ள 24 படைப் பிரிவுகள் பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கண்காட்சியை அடுத்து அன்றிரவு விஷேட அன்னதான நிகழ்வும் இடம் பெற்றது. (165)

# இதுவரை ஆரம்பிக்கப்படாத கரந்தாய்குளப் புனரமைப்பு



கிளிநொச்சி பச்சிலைப்பள்ளியின் கரந்தாய் குளத்தினை சுற்றுலா மையமாக உருவாக்கும் வேலைகள் தொடங்கப்படாமலுள்ளது.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் கரந்தாய்க்குளத்தினை சுற்றுலா மையமாக உருவாக்குவதென முடிவெடுக்கப்பட்டது. ஆனால் இதுவரை எவ்வித வேலைகளும் இடம்பெறவில்லை. புச்சிலைப்பள்ளியின் இயற்கை எழிலுடன் கூடிய வகையில் கரந்தாய்க்குளம் விளங்குகின்றது.

எவ்வாறான கடுமையான வரட்சி ஏற்பட்டாலும் இக்குளம் வற்றுவதில்லை. இந்நிலையில் இக்குளத்தினை ஒரு சுற்றுலா மையமாக உருவாக்குவதன் மூலம் ஏ-9 சாலையில் பயணிப்பவர்கள் இக்குளத்தில் தங்கிச் செல்வதற்கான வாய்ப் பேற்படும்.

இக்குளம் ஏன் புனரமைக்கப்படவில்லையென வடமாகாண சபை உறுப்பினர் பசுபதி அரியரட்ணவிடம் கேட்டபோது இரு ஆண்டுகளுக்கு முன் கிளிநொச்சி மாவட்ட செயலகம் கரந்தாய்க்குளத்தையும் சுண்டிக்குளம் பகுதியிலும் சுற்றுலா மையத்தினை உருவாக்குவதென தீர்மானித்து சூழல் சுற்றாடல் அமைச்சுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டு அவை கொள்கையளவில் [illegible] கொள்ளப்பட்டது.

ஆனால் இதுவரை எந்தவிதமான வேலைகளு[illegible] இடம் பெறவில்லையெனவும் தெரிவித்தார்.

வடமாகாண சபையி[illegible] [illegible]றுலா மையங்களையும் [illegible] [illegible]வாக்கும் வேலைத்திட்டத்தின கீழ் எதிர்காலத்தில் கரந்தாய்க்குளமும் சுற்றுலா மையமாக உருவாக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவித்தார். (160)

# சித்திரைப் பௌர்ணமி



வரணி வடக்கு கறுக்காய் கந்தசாமி ஆலயத்தில் சுமார் இருபது வருடங்களுக்குப் பின், சித்திரைப் பௌர்ணமி தின வழிபாடுகள் நேற்று முன்தினம் பலநூற்றுக்கணக்கான அடியார்கள் நடைபெற்றது.

இவ்வாலயத்தில் இதுவரை நித்தியபூசைகள் மட்டுமே நடைபெற்று வந்தமை குறிப் பிடத்தக்கது.


ஆனால், இந்த ஆண்டு வெகு சிறப்பாக நடைபெற்றதால் அடியார்களிடையே பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டதைக் காணமுடிந்தது.


இவ்வாலய புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் சிமிழ் கண்ணகை பொது மண்டபத்தில் நடைபெற்றது. தலைவராக சி.இந்திரராசா, செயலாளராக ரா.நிறோசன், பொருளாளராக த.ஜெகதீஸ்வரன் ஆகியோர் தெரிவாகினர். (150)

### சவுதி அரேபியா

# ஏமனில் கொத்துக்குண்டு வீசியது

# ஆதாரத்துடன் தகவல் அம்பலம்





ஏமன் கிராமங்களில் சவுதி அரேபியா கொத்துக்குண்டுகளை வீசியதாக ஆதாரத்துடனான தகவல் அம்பலமானது.

ஏமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து சவுதி அரேபியா உள்ளிட்ட வளைகுடா நாடுகள் போரில் ஈடுபட்டு வருகின்றன.

சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படையினர், தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளை (cluster bomb) பயன் படுத்துவதாக மனித உரிமை அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

ஏமனின் சாடா மாகாணத்தில் உள்ள கிராமங்களுக்கு அருகே கொத்துக்குண்டுகளை வீசியதற்கான ஆதாரங்கள் இருப்பதாக கூறியுள்ளது.

மேலும், இந்தக் குண்டுகள் அமெரிக்காவால், சவுதி அரேபியாவிற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் புகைப்படங்கள் ஆதாரமாக உள்ளது என்று மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

கொத்துக்குண்டுகள் பயன் படுத்துவதை பல நாடுகளில் தடைசெய்யப்பட்டபோதிலும், அமெரிக்காவும், சவுதியும் இதனை தடை செய்யவில்லை என்று குற்றம்சாட்டியுள்ளது.

சவுதி தலைமையிலான கூட்டுப்படையினர் ஏமனின் ஏடன் துறைமுக நகரில் பெரும் தரை வழிப்படை நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாக வெளியான தகவல்களை சவுதி அரேபியாவின் இராணுவப் பேச்சாளர் மறுத்துள்ளார். மேலும், இந்த குற்றச்சாட்டினை சவுதி மன்னரும் மறுத்துள்ளார்.


# நியூசிலாந்திலும் நிலநடுக்கம்

நியூசிலாந்தின் தெற்கு தீவிலுள்ள வனாகா நகரில் 5.8 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன

வனாகா நகரிலிருந்து வடமேற்காக 30 கிலோமீற்றர் தொலைவில் பூமிக்கு அடியில் 4 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இதனால் குயின்ஸ் டவுன், வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. பல வீடுகளின் கண்ணாடி ஜன்னல்கள் உடைந்து நொருங்கின. இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் ஓட்டம் பிடித்ததுடன் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

தெற்கு தீவிலுள்ள வனாகா நகரில் 6,500 பேர் வசிக்கின்றனர். நிலநடுக்கம் ஏற்பட்டதை தொடர்ந்து அங்கு தங்கியிருந்த பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஆப்கானிஸ்தானின் முதல் பெண் விமானி



ஆப்கானிஸ்தான் விமான படையில் முதல் பெண் விமானியாக தேர்வு பெற்று பணியாற்றுகிறார் 23 வயது நிரம்பிய இளம் பெண் நிலோபர் ரஹ்மானி. பெண்கள் கல்வி விகிதம் குறைவாக உள்ள ஆப்கானிஸ்தானில் பெண் ஒருவர் விமானியாக தேர்வு பெற்று உலக அரங்கின் கவனத்தை ஈர்த்துள்ளார். பைலட் நிலோபர் ரஹ்மானி கூறியதாவது, பயிற்சியை நிறுத்த வேண்டும் என நானும் என் குடும்பத்தாரும் அடையாளம் தெரியாதவர்களால மிரட்டப்பட்டோம். ஆனால் மன உறுதியுடன் பல சோதனைகளையும் கடந்து இந்த இலக்கை அடைந்துள்ளேன். என்னை போன்று சாதிக்கும் ஆர்வத்துடன் பல பெண்கள் இங்கு உள்ளனர் இங்கு இருபாலாரும் இணையாக பணியாற்றும் காலம் வருவதற்கும் பல ஆண்டுகள் பிடிக்கும் என்றார்.

# லக்வி விடுதலை தொடர்பில் அடுத்த கூட்டத்தில் விவாதம்

## - ஐ.நா. அறிவிப்பு

"மும்பை தாக்குதலில் மூளையாகச் செயற்பட்ட, ஜகியுர் ரகுமான் லக்வி விடுவிக்கப்பட்டது குறித்து, அடுத்த கூட்டத்தில் விவாதிக்கப்படும்" என, ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது.

லக்வியை, பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமாபாத் நீதிமன்றம் ஜாமினில் விடுவித்துள்ளது. இதற்கு, இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள், கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக, ஐ.நா.விற்கான இந்திய தூதர் அசோக் முகர்ஜி, ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலின், அல்-கொய்தா இயக்க தடைகள் குழுவின், தூதர் ஜிம் மெக்லேவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ள லக்வி, ஐ.நா., விதிமுறைகளை மீறி விடுவிக்கப்பட்டுள்ளார். அவரது சொத்துக்கள், நிதியாதாரங்கள் ஆகியவற்றை முடக்க வேண்டும்,என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதில் அளித்து, ஜிம் மெக்லே எழுதியுள்ள கடிதத்தில், இந்தியாவின் கவலை புரிகிறது குழுவின் அடுத்த கூட்டத்தில், இப் பிரச்சினை குறித்து விவாதிக்கப்படும் என, உறுதியளிக்கிறேன், என, தெரிவித்துள்ளார்.




# ஓடுபாதைகள் சேதமடைந்தமையால் கனரக வானூர்திகளுக்கு தடை



நேபாளத்தின் ஒரேயொரு சர்வதேச வானூர்தி தளமான திரிபுவனுக்கு கனரக வானூர்திகளை அனுமதிப்பதை நிறுத்தியுள்ளதாக அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

நிவாரணப் பொருட்களை ஏந்தி வரும் பாரிய வானூர்திகளை தமது வானூர்தி தளத்தின் ஓடுபாதையில் தரையிறக்க முடியாத நிலை தோன்றியுள்ளதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வானூர்தி ஓடுபாதையில் ஏற்பட்டுள்ள சிறியளவிலான துளைகள் காரணமாக சுமார் 196 டன்கள் வரையான எடையைக் கொண்ட வானூர்திகள் தரையிறங்குவது அபாயகரமான விடயம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.கடந்த வாரத்தில் சர்வதேச வானூர்திகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட போது, ஓடு பாதையில் ஏற்பட்டுள்ள பாதிப்பை கருத்தில் கொண்டு இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த தடை காரணமாக நிவாரணப் பணிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என நேபாள அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தநிலையில், சிறிய ரக மற்றும் மத்திய ரகங்களைக் கொண்ட வானூர்திகளுக்கு எந்தவித தடையும் இல்லை என நேபாள வான் போக்குவரத்து அதிகாரி மஹெந்திர சிங்க ராவல் தெரிவித்தார்

ஓடுபாதையில் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் தடையுத்தரவு தளர்த்தப் படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெண் குழந்தை என்பதால் உயிருடன் புதைத்த தாய்



பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் நகரில், பெண் குழந்தை பிறந்ததால் குழந்தையின் தாய் அந்தக்குழந்தையை உயிருடன் குழி தோண்டிப் புதைத்து விட்டார்.

குழந்தையின் அழு குரல் கேட்டு சிலர் அதை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். தற்போது அக்குழந்தை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறது.

அமிர்தசரஸைச் சேர்ந்த ஹர்பஜன் சிங் என்பவர் சம்பவத்தன்று வயல் பக்கமாக நடந்து போய்க் கொண்டிருந்தபோது குழந்தையின் அழு குரல் கேட்டுள்ளது, இதையடுத்து அவரும் கிராமத்தினரும் சேர்ந்து தேடிப் பார்த்தபோது ஒரு இடத்தில் குழிக்குள்ளிருந்தே அந்தக் குரல் கேட்டது தெரிய வந்தது.

தோண்டிப் பார்த்தபோது பிறந்த பெண் குழந்தை மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருந்தமை தெரிய வந்தது.

பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விரைந்து வந்து குழந்தையை மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டது, தற்போது குழந்தையின் நிலை மேம்பட்டு வருவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பெண் குழந்தை பிறந்ததால் அதைக் கொல்லும் எண்ணத்தில் குழந்தையின் தாயார் உயிருடன் புதைத்து விட்டுச் சென்றதாக தெரிகிறது. பொலிஸார் அந்தப் பெண்ணைத் தற்போது தேடி வருகின்றனர்.

# ஆபிரிக்காவிலிருந்து அகதிகளாக தஞ்சம் புகுவோர் எண்ணிக்கை உயர்வு



லிபியா, ஏமன், சிரியா உள்ளிட்ட நாடுகளில் உள்நாட்டு போர நடந்து வருகிறது. எனவே, மக்கள அங்கிருந்து அகதிகளாக புறப்பட்டு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர். இவ்வாறு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றி வருவதாலும், கடல் கொந்தளிப்பாலும் மத்திய தரைக கடலில் படகுகள் கவிழ்ந்து இந்த ஆண்டு மட்டும் 1750 பேர் பலியாகி உள்ளனர். எனவே, அகதிகள் படகை இத்தாலி கடற்படை தீவிரமாக கண்காணித்து வருகிறது.

தற்போது மத்திய தரைக் கடலில் தட்பவெப்ப நிலை சாதகமாக உள்ளது. எனவே, ஆயிரக்கணக்கானவர்களை ஆபிரிக்கா கண்டத்தில் இருந்து கடத்தல்காரர்கள் படகுகளில் ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்து வருகின்றனர்.

அதைத் தடுக்க இத்தாலி கடற்படையினர் 17 குழுக்களாக பிரிந்து மத்திய தரைக்கடலில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது லிபியா கடற்கரை பகுதியில் ஒரே நாளில் 4800 அகதிகள் மீட்கப்பட்டனர். மேலும் 10 பேர் பிணமாக மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் மட்டும் இத்தாலி கடற்படையினரால் 1 இலட்சத்து 70 ஆயிரம் அகதிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

# ஆலய நிர்வாகத்தை இரத்து செய்தமையால் மக்கள் பிரதேச செயலருடன் முரண்பாடு

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் கிராம சேவகரின் ஒத்துழைப்புடன் மாவட்ட கலாசார உத்தியோகத்தரின் முன்னிலையில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையை பிரதேச செயலாளர் இரத்து செய்துள்ளமையால் கிராம மக்களிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

வவுனியா தாண்டிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேகத்தை நடத்தும் நோக்குடன் செயற்பாடற்றிருக்கும் பழைய நிர்வாகத்தை கலைத்து புதிய நிர்வாகத்தை தெரிவு செய்துதருமாறு கடந்த 19 ஆம் திகதி கிராம அலுவலர் மூலம் பிரதேச செயலருக்கு குறித்த ஆலயத்தின் உபயகாரர்கள் மற்றும் கிராம மக்கள் கோரியிருந்தனர்.

இதற்கமைவாக தாண்டிக்குளம் கிராம அலுவலரால் 20.4.2015 ஆம் திகதியிட்டு 25.4.2015 ஆம் திகதி சனிக்கிழமை 4.00 மணிக்கு ஆலய முன்றலில் புதிய நிர்வாகசபை தெரிவு இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், 26 ஆம் திகதி கலாசார உத்தியோகத்தர் முன்னிலையில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந் நிலையில் கிராம அலுவலரினால் 30 ஆம் திகதி ஆலயத்தின் செயலருக்கு முகவரியிட்டு புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாகசபை இரத்து செய்யப்படுவதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார் எனக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந் நிலையில் ஆலயத்தின் நடைமுறைகளைச் சீராகச் செயற்படுத்துவதற்கும் கிராம அலுவலர் மற்றும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் முன்னிலையில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தை காரணமின்றி தடுத்து நிறுத்தி கிராம மக்களின் கருத்துக்கு மாறாக பிரதேச செயலர் செயற்பட்டுள்ளதாகவும் ஆலயத்தின் புதிய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவிடமும் முறையிடப்பட்டுள்ளது.

## மின்சார வயர்....

கம் தெற்குக் கல்லாரைப் பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான பாலச்சந்திரன் றஜீவன் (வயது-29), அவரது ஒரேயொரு ஆசை மகனான மல்லாகம் திருநாவுக்கரசு வித்தியாசாலையில் தரம்-4 இல் கல்வி பயிலும் றஜீவன் நிருஜன் (வயது-9) ஆகிய இரு 'வருமே உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றுப் பிற்பகல் கடுமையான மழைபெய்து கொண்டிருந்த வேளையில் சுன்னாகத்திலுள்ள சலூனுக்கு சைக்கிளில் தலைமயிர் வெட்டுவ்தற்காகச் சென்று விட்டு சுன்னாகம் ஐயனார் கோயிலுக்கு அண்மையிலுள்ள வெள்ளவாய்க்கால் வீதியால் தமது வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அந்த 'வீதியில் முழங்காலுக்கு மேல் வெள்ளம் காணப்பட்டமையால் 'தந்தையார் தனது மகனை சைக்கிளால் இறக்கி நடாத்தி அழைத்து வந்துள்ளார்.

அப்போது குறித்த பகுதியில் காணப்பட்ட தென்னை மரத்தில் இடி விழுந்ததால் மின்சார வயர் அறுந்து திடீரெனக் கீழே விழுந்துள்ளது.

இதன் போது ஏற்பட்ட மின் தாக்கத்தில் சிக்கி இருவரும் வெள்ளத்துக்குள் மயங்கிச் சரிந்துள்ளனர்.

அதன் பின்னர் 2.30 மணியளவில் அப் பகுதிப் பொதுமக்கள் இருவரையும் மீட்டு அம்புலன்ஸ் மூலம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இவர்களைப் பரிசோதித்த வைத்தியர்கள் இருவரும் ஏற்கனவே இறந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

இடி விழுந்தமையால் தென்னை மரம் கருகிக் காணப்பட்டதுடன் மின்சார வயரிலிருந்து மின் கடத்தப்பட்டுக் கொண்டுமிருந்தது.

இதனால் அப் பகுதிப் பொதுமக்களும் வீதியால் பயணிப்பவர்களும் பெரிதும் அச்சமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் உடனடியாக சுன்னாகம் மின்சார சபைக்கும், பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

எனினும் மின்சார சபையினர் அசிரத்தையுடன் செயற்பட்டதாகவும், பிற்பகல் 4.00 மணியளவிலேயே சம்பவ இடத்திற்கு வருகை தந்ததாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தால் மல்லாகம் தெற்கு கல்லாரைப் பகுதி முழுவதும் சோகமயமாகக் காணப்படுகிறது.

மேலதிக விசாரணைகளைச் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (25)

## மகிந்த...

கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க இருவரும் சந்திக்க வேண்டியது அ்வசியம் என்றும் இவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரை அனுப்பி, மகிந்த ராஜபக்ஷவை சந்திப்புக்கு அழைக்க வேண்டும் என்றும் இவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதேவேளை, குமார வெல்கம, பந்துல குணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே, ரி.பி.எக்க நாயக்க, காமினி லொக்குகே ஆகியோர், இன்று ஜனாதிபதியைச் சந்தித்து நாளை புதன்கிழமை நடக்கவுள்ள சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கவுள்ளனர்.

இதேவேளை, இந்த சந்திப் பில் கலந்து கொள்ளவுள்ள கட்சியின் தலைவர்கள் குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கை மற்றும் எதிர்வரும் பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் இதன்போது ஆராயப்படும் என அவர் குறிப்பிட்டார்.

எவ்வித நிபந்தனைகளும் இன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும் இன்னாள் தலைவரும், பேச்சுவா ர்த்தை நடத்தவுள்ளதாக டிலான் பெரேரா தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் எதிர் கால அரசியல் செயற்பாடுகள் குறித்தும் அது எவ்வாறு அமையும் என்பது குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்படும் என டிலான் பெரேரா தெரிவித்தார்.

## புதிய...

பான்மையாக இருந்தாலும் நாட்டு மக்களின் பெரும்பான்மையானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே உள்ளனர். இது இம்முறை மே தினத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய நாடாளுமன்றம் உண்மையான மக்களின் நிலைப்பாடுகளை பிரதிப்லிக்கவில்லை. இதனால், துரிதமாக நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்களின் நிலைப்பாடுகளை பிரதிபலிக்கும் நாடாளுமன்றம் ஒன்றை தெரிவு செய்ய வேண்டும்.

தேர்தல் முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை துரிதமாக நிறைவேற்றி கொள்ள வேண்டும். எனினும் புதிய தேர்தல் முறையில் உடனடியாக தேர்தலை நடத்த முடியாது.

இதனால், தற்போதுள்ள முறையின் கீழாவது தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## போர்க்குற்ற...

யாற்றிய போது, ஐ.நா.வின் போர்க்குற்ற விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இதுகுறித்து டுவிட்டரில் தனது கருத்தைப் பதிவு செய்துள்ள நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்,

ஐ.நா.வின் போர்க்குற்ற விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், எஞ்சியுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும், ஜோன் கெரி கேட்டுக் கொண்டுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

## தனியார்...

அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.ஏ.எச்.எம். டக்ளஸ் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் கட்டணப் பட்டியலில் நோயாளர்களுக்கு வழங்கும் சகல வசதிகளையும் குறிப்பிட்டிருக்க வேண்டும். என்று தெரிவித்துள்ள அதிகார சபை, இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அறிவித்துள்ளது.

## அரச...

சுட்டிக்காட்டியுள்ளது.

இது விகிதாசாரத்தில் 12.1 வீத அதிகரிப்பாகக் காணப்படுகின்ற அதேவேளை, அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டமை இதற்குரிய பிரதான காரணம் என இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "குறை ஒன்றும் இல்லை" நூல் வெளியீட்டு விழா



மன்னார் தலைமன்னாரைச் சேர்ந்த எழுத்தாளர் எம்.சிவானந்தன் (துறையூரான்) எழுதிய 'குறை ஒன்றும் இல்லை' நூல் வெளியீட்டு விழா நேற்றுக் காலை சிறப்பாக இடம்பெற்றது.

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் மன்னார் கலையருவி நிலையத்தில் குறித்த வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் கலந்து கொண்டார்.

இதன் போது தலைமையுரையினை அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார். வெளியீட்டுரையினை கவிஞர் மன்னார் அமுதன், ஆய்வுரையினை நாவலாசிரியர் எஸ்.ஏ.உதயன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எம். சியான் மற்றும் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட் தந்தை தமிழ் நேசன் அடிகளார் மற்றும் நூலாசிரியர் எழுத்தாளர் எம்.சிவானந்தன் (துறையூரான்) ஆகியோர் இணைந்து நூல் வெளியீடு செய்து வைத்தனர்.

இதன் போது எழுத்தாளர்கள், கல்விமான்கள் என நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொணடிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நல்லாட்சி...

எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் பொய்ப் பிரசாரத்திற்கு பதில் கொடுக்கும் முகமாகவும் மத்திய குழு உறுப்பினர்கள் அவதானமாக இருந்து அவ்வப்போது தேவைப்பட்டால் அதற்கான சரியான விளக்கத்தை தெரிவிப்பதற்குமான நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒழுக்காற்று நடவடிக்கைகள் சில எடுக்கப்பட்டுள்ளன. அதிலும் முக்கியமாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் மார்ச் முதலாம் திகதியில் இருந்து கட்சி உறுப்புரிமையில் இருந்து விலக்கப்பட்டிருந்தார். அவர் தானும் கட்சியில் இருந்து விலகுவதாக கடிதம் கொடுத்திருந்தார்.

தேர்தல் ஆணையகமும் அதனை ஏற்று அவருடைய இடத்திற்கு இன்னொருவரை நியமிக்குமாறு கடிதம் கொடுத்துள்ளது. நாங்கள் விசாரணை இல்லாமலேயே நீக்கிய ஒரு உறுப்பினர். அதற்கு பிரதான காரணம் விசாரிப்பதற்கு அவர் எங்கே என்று கூட தெரியாமல் அவர் தலைமறைவாகியுள்ளார்.

ஏனையோருக்கு நாம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளோம் பதில் அளிக்காதவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமாறும், விளக்கம் அளித்தவர்கள் மீது விசாரணைக் குழு ஒன்றை நியமித்து விசாரணை செய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அது விசாரணை நடத்தி மத்திய செயற்குழுவுக்குமிக விரைவாக அறிக்கையை வழங்குமாறும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இரவோடு இரவாக நாட்டில் நல்லாட்சி வந்து விடவில்லை. அது படிப்படியாக நிகழவேண்டிய விடயம். 19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் நல்லாட்சி நாட்டில் மீளவும் முளை விடுவதற்கு நல்ல சந்தர்ப்பமாக இருக்கும் என்பது எங்களுடைய நம்பிக்கை எனத் தெரிவித்தார்.

## இராணுவத்...

குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வாரம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் சிதம்பரபுரம், பூந்தோட்டம் நலன்புரி நிலையங்களிலுள்ள குடும்பங்களின் மீள் குடியேற்றம் தொடர்பான முக்கிய கூட்ட மொன்று நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண சுகாதார மற்றும் புனர்வாழ்வு அமைச்சரின் சார்பில் அமைச்சரின் பிரத்தியேக செயலாளரினால் மெனிக்பாம் பகுதியில் ஆறாயிரம் ஏக்கர் காணி இராணுவத்தினரின் தேவைக்கு சுவீகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது பதிலளித்த மாவட்ட அரசாங்க அதிபர் யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் இவ்வாறு பெருந்தொகையான காணிகளை இராணுவத்தின் தேவைக்கு வழங்க முடியாது எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மத்திய மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை யாழ்ப்பாணத்தில் உயர்பாது காப்பு வலயத்தில் காணிகள் பொதுமக்களுக்கு மீளக் கையளிக்கப்படுகின்ற நிலையில் இவ்வாறு புதிதாக இராணுவத் தேவைக்கு காணி வழங்குவது பொருத்தமற்றதென்றும், இவ்வாறான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சினால் அமைச்சரவைப் பத்திரமொன்று தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# சுதந்திரக் கட்சி தீர்மானித்தால் அமைச்சுப் பதவியைக் கைவிடத்தயார்

## அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு



அமைச்சுப் பதவிகளை கை விடுவது என ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்தால், அமைச்சுப் பதவியைக் கைவிட தான் தயாராக இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளதாக அவரை மேற்கோள்காட்டி கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் இதுதொடர்பாக தனது நெருங்கிய நண்பரொருவருடன் கலந்துரையாடியிருக்கின்றார்.

அதில், ஒப்பந்தங்களை போடுவதற்காக நான் அமைச்சுப் பதவியைப் பெறவில்லை. நாட்டில் நடக்கும் அபிவிருத்திக்கு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும் என்று ஜனாதிபதி எண்ணியிருப்பார். இதன் காரணமாகவே எமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.

அமைச்சுப் பதவிகள் கிடைக்காதவர்களுக்கு மனவருத்தமும் அதிருப்தியும் இருக்கக் கூடும்.

நான் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து கொள்ளவில்லை. நான் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கின்றேன்.

அமைச்சுப் பதவிகளை கைவிடுவது என கட்சி தீர்மானித்தால், அமைச்சுப் பதவிகளை கைவிட நான் தயாராகவே இருககின்றேன். பல வருடங்களாக இலங்கையை ஏறெடுத்து பார்க்காத வெளிநாடுகள் தற்போது இலங்கைக்கு வந்து உதவிகளை செய்வதாகவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## அருவியாற்றில் குளித்த சகோதரர்கள் மாயம்


(மன்னார்)

மன்னார் நானாட்டான் அருவியா[illegible] குளிக்கச்சென்ற ஒரே கு[illegible]த்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் காணாமற் போயுள்ளனர் என அ[illegible]களது உறவினர்கள் நானாட்டான் பொலிஸில் மு[illegible]ள்ளனர்.

ம[illegible] தாராபுரத்தைச் சேர்ந்த முஹம்மது சிபான் (வயது-32), முஹம்மது முபாஸ் (வயது-18) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களே இவ்வாறு காணாமற் போயுள்ளனர்.

இவ்வாறு காணாமற் போனவர்களை தேடும் பணியில் பொது மக்களும், கடற்படையினரும், தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# டோனியிடம் மீண்டும் வீழ்ந்தார் ஹோலி




(சேப்பாக்கம்)

ஐ.பி.எல். போட்டித் தொடரில் நேற்று சென்னை சுப்ப கிங்ஸ் மற்றும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் சென்னை அணி 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய சென்னை அணி ஆரம்பத்தில் தடுமாறினாலும் பின்னர் நடுவரிசை துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பான ஆட்டத்தால் 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ரெய்னா 52, டோனி 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பெங்களூர் அணி சார்பாக ஸ்ராக் 3, வீஸ் மற்றும் வி.பட்டேல் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலளித்து ஆடிய பெங்களூர் அணி, சென்னை பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சில் சின்னாபின்னமாகியது. அவ்வணி 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்களையே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஹோலி 48 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நெஹ்ரா 3, பிராவோ மற்றும் பாண்டே தலா 2 விக்கெட்டுக்களை சாய்த்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக ரெய்னா தெரிவானார்.

# பிரதமர் மகிந்தவின் ஆட்சியில் அடுத்த வருட மே தினம்

## நம்பிக்கையுடன் அளுத்கமகே

நாம் அடுத்த மே தினத்தை ஜனாதிபதி மைத்திரியாகவும், பிரதமர் மகிந்தவாகவும் உள்ள ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் கீழ் கொண்டாடுவோம் என முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சி மே தின கூட்டத்தை நடாத்தி, தொழிலாளர்களின் உரிமைகள் குறித்து பேசுவது நகைப்புக்கிடமான ஒரு விடயமாகும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# மகிந்தவின் உயிருக்கு கடும் அச்சுறுத்தல்

## பந்துல அபாய அறிவிப்பு

(கொழும்பு)

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியை மேற்கோள்காட்டி முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவித்துள்ளார்.

நாடு பிளவுபட்டுவிடாமல் யுத்தத்தை நிறைவு செய்து வலுவான அரசை அமைத்து ஆட்சி செய்த போதிலும் இதற்கு முன் எந்தவொரு ஜனாதிபதியும் சந்திக்காத வகையில் முன்னாள் ஜனாதிபதியும், அவரது குடும்பத்தினரும் அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளாகி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் இதற்கு முன்னர் ஒருபோதும் இது மாதிரியான அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் சகல உரிமைகளையும் பறித்து கொண்டு அவரை கட்சியிலிருந்தும் ஒதுக்கியிருந்ததாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றம் சுமத்தியிருந்தார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதியொருவருக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து சலுகைகளும், பாதுகாப்பும் மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச நிறுவனங்களில் விரைவில் "வைபை"

(கொழும்பு)

விரைவில் அரச நிறுவனங்களில் இலவச WiFi வலயங்களை ஏற்படுத்தவுள்ளதாக, தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் விரைவில் இந்தச் சேவை நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

அரச நிறுவனங்களில் சேவையைப் பெற்றுக்கொள்ளும் பொதுமக்களும் இந்த சேவையை பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தில் குறிப் பிடப்பட்டிருந்த இலவச WiFi சேவை, ஏற்கனவே ரயில் நிலை யங்கள், பொது இடங்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான பொது இடங்களில் இந்தச் சேவை அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தாவிடம் 35 ஓட்டங்களால் வீழ்ந்தது ஹைதராபாத்

(ஈடன் கார்டன்)

ஐ.பி.எல். போட்டித் தொடரின் 38 ஆவது ஆட்டமாக நேற்று இடம்பெற்ற ஹைதராபாத் சன் ரைசர்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கு இடையேயான போட்டியில் கொலகத்தா அணி 35 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் அணி முதலில் கொல்கத்தா அணியை துடுப்பெடுத்தாடக் கேட்டுக் கொண்டது. இதன்படி துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி முன்வரிசை வீரர்களின் சராசரியான ஓட்டக் குவிப்பால் 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 167 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் உத்தப்பா 30, கம்பீர் 31, பாண்டே 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஹைதராபாத் அணி சார்பாக புவனேஷ்வர் குமார் மற்றும் கே. சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி கொல்கத்தா அணியின் பந்துவீச்சில் ஓட்டங்களை பெற தடுமாறியது. ஒரு கட்டத்தில் 7 விக்கெட் இழப்பிற்கு 81 ஓட்டங்களை அவ்வணி பெற்றிருந்தது. பின் வரிசை ஆட்டக்காரராக களமிறங்கிய கே. சர்மா மட்டும் அதிரடியாக ஆடி 32 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதியில் ஹைதராபாத் அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 132 ஓட்டங்களையே பெற முடிந்தது.

பந்துவீச்சில் கொல்கத்தா சார்பாக யாதவ் மற்றும் ஹொக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக உமேஷ் யாதவ் தெரிவானார்.

# இலங்கையுடன் பொருளாதார உறவு ஆர்வம் காட்டும் பாகிஸ்தான்



இலங்கை மக்களின் நலன்களுக்காக இலங்கையுடனான பொருளாதார மற்றும் தொழில் சம்பந்தமான உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான புதிய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஷகீல் உசேன் பிரதமர் மாளிகையில், பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்தித்த போதே பிரதமர் இதனைக் கூறியுள்ளதாக பாகிஸ்தான் டெய்லி டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# இலங்கையருக்கு டோகாவில் சிறை

(கொழும்பு)

கவனக் குறைவாக காரை ஓட்டிச் சென்று ஒருவர் உயிரிழக்கவும் சிலர் காயமடையவும் காரணமான இலங்கையர் ஒருவருக்கு டோகா குற்றவியல் நீதிமன்றம் ஆறு மாத சிறைத்தண்டனையை விதித்துள்ளது.

இவ்விபத்தில் வளைகுடா இணை ஒப்பந்த குடியுரிமையாளர் ஒருவர் உயிரிழந்ததுடன் சிலர் காயமடைந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய இலங்கை நபருக்கு ஆறு மாத சிறைத் தண்டனையை விதித்துள்ள நீதிமன்றம், மூன்று மாதங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்துள்ளது.

அத்துடன் காப்புறுதி நிறுவனத்துடன் இணைந்து கொல்லப்பட்ட நபருக்கு இழப்பீடாக 2 இலட்சம் கட்டார் ரியால்களை வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி விபத்து சல்வா என்ற வீதியில் நடந்துள்ளது. தண்டனை விதிக்கப்பட்டுள்ள நபர் ஓட்டிச் சென்ற காரின் சில்லு ஒன்று சேதமடைந்துள்ளது. இதனால் வாகனத்தை ஓட்டிச் சென்றவர் அதனை கட்டுப்படுத்த முடியாமல் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றின் மீது மோதியுள்ளார்.

மோதுண்ட கார் பல முறை புரண்டு விழுந்ததால், அதில் இருந்த நபர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில். அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.